புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது.

(1889)

# இந்து சாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

['ரேலிபோன்' இல. 56.]

பத்திரிகை கிரயம்.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | 1-க்கு ரூ | 5-00 |
| இலங்கை, இந்தியா: | ,, ரூ. | 8-00 |
| தேசாந்தரப்பகுதி: | ,, ரூ. | 9-00 |
| தனிப்பிரதி: | | சதம் 5 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

உ

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேக்கச், சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருளக னீங்கப், பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவாகமத்தி னிலை துலங்கப், பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்தவறிவிச்சை தொழிலென்றேனு, மதம்பூத்த விநாயகன் றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக,
ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | | ரூ 10-00 |
| ,, | அரைக்கலம் | ரூ 5-00 |
| ,, | காற்கலம் | ரூ. 3-00 |

அடுத்த முறைகட்கு விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினுலன்றிப் பிரசுரிக்கப்படா.

புத்தகம்—சுச } யாழ்ப்பாணம்; - ஆங்கிரசவருஷ ஆடிமீ உ0உ, (1932 ஆகஸ்ட் 4) வியாழக்கிழமை { இலக்கம்— க0.


"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும்,
ஆன்ற பெருமைதரும்"

## ஓர் புதிய மதம்.

[ஸ்ரீமத் சுவாமி தேவாத்மானந்தா அவர்கள் "பிரபுத்தபாரத"ப் பத்திரிகையில் எழுதியதன் மொழிபெயர்ப்பு.]

(1-8-32-ன் தொடர்ச்சி)

இனிச் சில விஞ்ஞான சாஸ்திரிகள், "கடவுள் ஒருவர் உண்டு என்பதை எமக்கு ஒரு ஆராய்ச்சிச்சாலையிற் காட்டினுற்றான் நாம் நம்புவோம்" என்று கூறுகிறார்கள். அது மௌட்டீகமேயன்றி வேறு என்ன. கடவுள் அப்படி ஆராய்ச்சிச்சாலையில் கண்டு பிடிக்கப்படக்கூடிய ஓர் வஸ்து அல்ல. சமயமும் விஞ்ஞான சாஸ்திரமும் தாம் தாம் அறியவேண்டிய வஸ்துவையடைய வித்தியாசம் வித்தியாசமான வழிவகைகளைக் கையாடுகின்றன. இரு பகுதியின் வழிவகைகட்கும் ஒருவிதமான சம்பந்தமுமில்லை. விஞ்ஞானம் சாஸ்திரம் அறியும் வஸ்து ஒன்று. சமயம் அறியத்தெண்டிக்கும் வஸ்து வேறொன்று. சமயம் பின்பற்றும் வழி ஒன்று; விஞ்ஞான சாஸ்திரம் பின்பற்றும்வழி வேறொன்று எனவே இரு பகுதிகட்கும் இது விஷயத்தில் முரண்பாடு இல்லை. ஆனுல் எப்போது அவைக்குள் வித்தியாசமும் முரண்பாடும் தோற்றுமென்றால், இருபகுதியினரும் கொண்டுள்ள உண்மைகள் மாறும்போதே; உண்மை என்றும் ஒன்றுதான். கடவுள் அநுக்கிரகத்தால் ஓர் சமயம் உண்டானது; அல்லது கடவுளருள் பெற்ற ஒருவரால் உண்டானது என்றதால் மாத்திரம் ஒருசமயம் சதா உண்மையாயிருக்க வேண்டுமோ? உண்மைக்கு முரண்படுமாயின், கடவுளால் உண்டாக்கப்பட்ட சமயமாயினுஞ்சரி, அது உண்மைச் சமயமாகாது. நாம் விஞ்ஞான சாஸ்திரத்தையாவது விஞ்ஞான சாஸ்திரிகளையாவது குறைகூறவொண்ணாது. நேராக, எமது சமயங்களின் மூலாதாரக் கொள்கைகளை உண்மைக்கியைந்தனவாய் வைத்திருத்தல் வேண்டும். அப்படியிருப்பின், விஞ்ஞானசாஸ்திரத்திற்கும் சமயத்திற்கும் ஒருபோதும் கலகம் நேரிடாது.

முன்கூறியவற்றில் இருந்து இருவிஷயங்கள் புலப்படுகின்றன ஒன்று, தற்காலத்து மதங்களிற்பல விஞ்ஞானசாஸ்திர வாராய்ச்சிக்கு முன்னிற்கமாட்டாதிருப்பதனுல், அவற்றில் மக்கள் பலர் நம்பிக்கையின மடைகின்றார்கள் என்பது. மற்றது, உலகில் உள்ள பல்வேறு மதங்கள் தத்தம்கொள்கைகளில் முரண்பட்டு வீண் வாக்குவாதங்களுக்கு ஏதுவாகி அனர்த்தம் விளைக்கின்றன என்பது. இவ்விரண்டு கெடுதிகளினின்றும் தப்புதற்காக உண்மையையுணர்ந்த மக்களிற்சிலர் ஓர் புதிய மதத்தை உண்டாக்கி, அதன்படி மக்களை ஒழுகப்பண்ணுதல் சாலச் சிறந்ததென எண்ணுகிறார்கள். இத்தப் புதிய மதம் கடவுள ஒருவர் உண்டு. அவர் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவர், நாம் கன்மம் இழைத்தால் அவர் எமக்குப் பிரதியுபகாரமாய் நன்மைகளை அளிப்பார், அன்றேல் நரகத்திற் புகுத்திவிடுவார் என்று விரட்டும் சமயம் அல்ல. மக்கள் அனைவரும் ஒன்றே; அவர்கள் யாவரும் சகோதரத்துவம் பூண்டவர்களாகும் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டதே இப்புதியமதம். பழையமதங்களிற் சில தேவன் ஒருவர் உண்டு, அவர் பரமண்டலத்தில் இருப்பார், அவர் நீதாசனத்தில் இருந்து பாவிகளுக்கும் புண்ணியம் இயற்றியவர்களுக்கும் அவரவர்கள் புண்ணியபாவங்களுக்கேற்றபடி நீதியளிப்பார்; அவரை நாம எல்லோரும் தொழவேண்டும் எனக் கட்டளையிட்டன. ஆனுல், இப் புதிய மதமோ அத்தகைய கட்டளைகளை விதிக்காது மனிதர்களும் கடவுளின் அம்சமே; மனிதவர்க்கத்தினரும் இறைவனும் ஒன்றே; இத்தகைய மனிதவர்க்கத்தினரின் நன்மைக்காக அவர்களுக்குச் சேவை புரிய வேண்டும்; சேவை புரிந்து அவர்களைக் கனம்பண்ணவேண்டும்; அப்படிச் சேவை புரிந்து கனம்பண்ணுவதால் இறைவனுக்குச் சேவைபுரிந்து அவனைக் கனம்பண்ணுவதாக முடியும் என்பதே இப் புதிய மதக்காரரின சித்தாந்தமாகும். இக்கொள்கையை மூலாதாரமாகக் கொள்ளும் இச்சமயமே எல்லாவற்றுனுஞ் சிறந்தது; புனிதமானது; எமது மறுமையைப்பற்றிச் சிந்திக்கவேண்டியதில்லை சர்வஜீவராசிகளின்மீதும் அன்பு பாராட்டி அவர்களுக்கு இதம் புரிந்தால் அதுவே போதுமானது என்பது இத்தப் புதியமதத்தின் கொள்கையாம். இம்மதத்தை, உலகமக்கள் எல்லாரும் கைக்கொண்டால், அதனுல் வரும் நன்மையைக் கூறவேண்டுமோ? இப்பூவுலகமே உண்மையான மோட்சபூமியாய்விடும் என்பதே இப்புதியமதஸ்தரின் முடிபு.

இக்கொள்கைகளை நாங்கள் சிறிது நோக்கும்போது, அவை உண்மையில் மேலானவைதான் என்று சந்தேகமின்றி எண்ணுகிறோம். ஆனுல் இத்தப் புதிய மதத்தைக் கிரியாம்சத்திற் கைக்கொள்ளுதல முடியுங் காரியமோ என்பது சந்தேகம்.

உண்மையைக்கூறுங்கால், சமயமானது வாழ்க்கையின் மூலாதாரக் கொள்கைகளைக் குறித்த சில உண்மைகளை விளக்குவதை லட்சியமாகக் கொண்டது. எனினும், அந்த மூலாதாரமான உண்மைகள் பல மூடநம்பிக்கைகளினுலும் மூடக்கொள்கைகளினுலும் மறைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி மறைக்கப்பட்டிருப்பினும் அந்த உண்மைகள் என்றும் அப்படியே இருக்கும். அந்த உண்மைகளை நாம் அறிதற்காக எமக்குச் சமயமானது வழிகாட்டியாயிருக்கும். ஆனுல் அந்த உண்மை மறைபட்டு, மூடநம்பிக்கைகளையே முற்றிலும் தழுவியதாய் ஒரு சமயம் இருப்பின், அதின்மீது உண்மையை அறிய அவாப்படுபவர் யாரும் அதிருப்தியடைவார்கள். "இந்த மதத்தை நாங்கள் தொன்றுதொட்டு அநுசரித்துவந்தோம். அதன் கொள்கைகளைமாற்றவொண்ணுது" என்று கூற அநேகர் முன்வருவார்கள். ஆனுல் அவர்கள் எப்படிக் கூறினும், மனத்திருப்தி யளிக்கா அம்மதக் கொளகைகளை காலம் இடம் என்னும் இவற்றிற் கேற்றபடி மாற்றி அமைக்க வேண்டும். சமையோசிதமாக, அதன் கொள்கைகளைப் புதிதாய் உண்டாக்கவேண்டும்; அல்லது திருத்தவேண்டும். அப்படி அத்தக் கொள்கைகள் காலந்தோறும் மாற்றப்பட்டு, அல்லது திருத்தப்பட்டு, அல்லது குறைக்கப்பட்டுவந்தால் கடவுள் இத்தன்மையர், இயற்கை இத்தன்மைத்து, மனிதன் இத்தன்மையன என்று மனிதவர்க்கத்தினர் காலந்தோறும் மாறி மாறி எண்ணுகிறபடி திருப்தியளிக்கக் கூடியதாயிருக்கும். அதைவிட்டுப் பழைய கொள்கைகளையே கட்டிப் பிடித்துக்கொண்டு நிற்கவொண்ணுது.

ஆனுல் ஒன்று, வாழ்க்கைக்கு மூலாதாரமான கூண்மைகளைக் காட்டுவதையே மதம் லட்சியமாகக்கொண்டுள்ளது என

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## அடிமைத்தனத்தை அகற்றுவது எப்படி?

### பகிஷ்காரம், ஒற்றுமை, உற்சாகம்.

### பிரசாரவேலையிற் பிரவேசிக்கவேண்டும்.

### பெண்மணிகள் செய்யக்கூடியன.

திருவுடைச்செல்வி க. பத்மாவதிஅம்மாள் கொழும்பு நகரிற்செய்த பிரசாரணத்தின்சாரம்.

பூர்வத்தில் நம்மினவளநாட்டில் டாம்பீகமற்ற ஓர் பொருளாதார அமைபு இருந்தது. அக்காலத்திற் பட்டினியால வருந்தியோர் மிகச் சிலர்; வேலையின்றித் தவித்தோர் சிலர். எம் சுதந்தரத்தைக் கொள்ளை கொள்ளவும் எமது ஆற்றலை நசிக்கவும் எங்கோவிருந்த இங்கிலாந்து முன்வந்தது. இங்கிலாந்து இங்கு கால் வைத்ததால் விளைந்த பயன் என்ன? அரசியல் விஷயத்திற் கோழைகளானுேம்: பொருளாதார நிலைமையை இழந்தோம்; எம்புராதன பழக்க வழக்கங்களைக் கைவிட்டோம்; சுருங்கக் கூறுங்கால் நாம் எவ்வாற்றுனும் இங்கிலாந்தின் அடிமைகளானுேம்.

இப்படியாக எம்மைப் பிணித்திருக்கும் "பந்தத்தை எவ்வாறு அறுத்தெறிவது? முதலாவது நாம் சுதந்தரம்பெற வேண்டும் என்ற அவா எம்மிடை உதிக்கவேண்டும். நாம் சுதந்தரவேட்கை கொள்ள வேண்டும். அச்சுதந்தரத்தைப் பெறுவதற்காக நாம் எவற்றையும் அர்ப்பணஞ் செய்ய ஆயத்தமாயிருத்தல் வேண்டும். நாம் என்ன என்ன அர்ப்பணம் செய்ய வேண்டும் என்பது எமக்குத் தெரிந்த விஷயமாகும். சுதந்தரப்போரில் இங்கிலாந்து தேசமானது எம்மீது ஈவிரக்கம் காட்டுமோ என்பது சந்தேகமே அடிமை நாடுகள் சுயராச்சியம் கேட்கும் போது, இது நீதி இது அநீதி என்பதை இங்கிலாந்து நோக்காது. எவ்வித ஆயுதத்தைக் கொண்டேனும் அந்நாடு அடிமைநாடுகளை நசிக்கத் தெண்டிக்கும். ஐயர்லாந்து விஷயமாகத் தற்போது இங்கிலாந்து கையாடும்முறைகளை நாம கண்ணுரக் காண்கின்றோம்; காதாரக் கேட்கின்றோமல்லவா?

எல்லாவற்றிற்கும் முதலாக எம்மக்களுக்குச் சுதந்தரவுணர்ச்சியை ஊட்ட வேண்டுமென்றேன். இது என்தேசம்; இவர் என்தேசமக்கள்; என் தேசத்தின்மீது யான் பக்திகொள்ளவேண்டும்; என்று ஒவ்வொரு மனிதனும் உணரச்செய்ய வேண்டும். கண்டபாவனையிற் கொண்டை முடிப்பார் சிலராக மேனுட்டு நாகரிகத்தைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதை நாம் ஒழிக்கவேண்டும்.

பொது ஜனங்களிடை சென்று பிரசாரவேலை செய்யவேண்டும். எமது அரசியல் நிலைமை இவ்வாறு இருக்கிறது; பொருளாதார நிலமை இப்படியாய்விட்டது என்பதை அவர்களுக்கு ஊட்டல் வேண்டும்.

நாம் இப்போது எமது சுதந்தரப் போரைத் தொடக்குவது உசிதமல்ல; பொது ஜனங்கள் நன்கு அரசியல் விஷயங்களைப் பற்றிப்பயின்றபின்னரே நாம் அத்தகைய போரிற் பிரவேசிக்க வேண்டும், அதுவரைக்கும் நாம் பொறுமையுடன் இருத்தல்வேண்டும் எனச் சிலர் கூறுகிறார்கள். அது மௌட்டீகமேயன்றி வேறு என்ன? எமது பாமரஜனங்கள் அத்துணை மூடரல்ல.

பெண்மணிகள் இவ்விடுதலைப் போராட்டத்தில் மிக்க மும்முரமாக ஈடுபடல்வேண்டும். பெண்மணிகளாலேயே பிரதானமாக நமது நாடு சுயராச்சியத்தை அடைய வேண்டும். இவை எல்லாவற்றிலும் மேலாக எமக்குள் ஒற்றுமை இருத்தல் வேண்டும். "ஒன்றுபட்டாலுண்டுவாழ்வே ஒற்றுமையின்றேல் அனைவர்க்கும் தாழ்வே" என்பது பாரதியின் பொன்மொழிகள்.

எமது நாடு ஓர் பிரத்தியேகமான நிலைமையில் இருக்கின்றது. நாம் பாவிக்கும எல்லாப்பொருட்களும் அந்நிய தேசங்களிலிருந்தே வருகின்றன. நாம் சதா அந்நியர் கையையே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்படி நாம் இருக்கவொண்ணுது. நாம் தற்பாதுகாப்புடையவர்களாக விருத்தல் வேண்டும். அப்படித் தற்பாதுகாப்பின்றி, அந்நியரையே நம்பிவாழின், சுயராச்சியத்தால் நமக்கு ஆம் பயன் என்ன! அன்பீர் அறைவீர்! கைத்தொழிற்கல்வி கற்குமாறு எம்நாட்டுவாலிபர்களை நாம் அந்நியநாடுகளுக்கு அனுப வேண்டும். அவர்களின்மூலமாக எம்நாட்டில் கைத்தொழிற்சாலைகளை நிறுவி எம் நாட்டுப்பணத்தை இங்கேயே தங்கி நிற்கும்படி செய்தல்வேண்டும். இந்தியநாட்டில் இருந்து அநேக வாலிபர் ஜப்பானிற்குச்சென்று ஆங்குள்ள கைத்தொழின் முறைகளைப் பயின்று வருகிறார்கள். அவர்கள் தம் தாய்த்தேசம் மீண்டுபெருங் கைத்தொழில்களை விருத்திசெய்வதை என்கண்ணுரக்கண்டிருக்கிறேன். நாம் ஏன் அப்படிச்செய்யவொண்ணுது?

நாம் சுதந்தரப்போரை நடாத்தும் போது எம்கையிலுள்ள மிருகசக்திக் கேதுவாய ஆயுதங்களனைத்தையும் இங்கிலாந்து பறிமுதல்செய்துவிடும் ஆனுல் பகிஷ்காரமென்ற ஓர்கூரிய ஆயுதம் இருக்கிறதே, அதைபபற்ற இங்கிலாந்தால் முடியுமா? இங்கிலாந்தால் மாத்திரமன்றி இந்த உலகத்தார் முழுப்பேராலும் முடியுமா? முடியாதே! அந்த ஆயுதத்தையே நாம் கைக்கொள்ளவேண்டும். அந்நியப் பொருள்களைப் புறக்கணிக்கவேண்டும். எமது நாட்டில், எம்மவரால் ஆக்கப்பட்ட பொருள்களையே நாம் பாவிக்கவேண்டும். அதனுல் எமக்குச் சிறிது அசௌகரியம்ஏற்படக்கூடுமென்பது உண்மையே; அதனுல் எமது சீவியச்செலவைச் சுருக்க வேண்டி ஏற்படும். ஆனுல் இப்போது பணமுட்டு, தொழிலின்மை ஏற்பட்டு விட்டதால் இப்போதும் எம் சீவியச் செலவைச் சுருக்கித்தானே நாம் வருகிறோம்.

ஓர் அரசியற்றிட்டத்தைத் தயாரித்து அதனை அங்கீகரிக்குமாறு இங்கிலாந்திற்கு அளித்தால் அது அப்படி அங்கிகரிக்கமாட்டாது. அவர்கள் எமக்கு அரசியற் சீர்திருத்தம் அளிப்போம் என்று வாய்கொண்டமட்டும் கூறி அரசியல் விசாரணைச் சபைகளை அனுப்பினுல், அல்லது வட்டமேசை மகாநாடுகள் கூட்டினுல், நாம் அவற்றோடு ஒத்துழைக்கவொண்ணுது. அவையெல்லாம வீண்புரூடா என்பதை நாம் நன்கு உணரவேண்டும். அப்படாடோபங்களில் நாம் ஏமாறவொண்ணுது. ... ... ...

நாம் எமது போராட்டத்தைக் கடைசிவரைக்கும் நடாத்திச் சித்திபெய்த வேண்டுமானுல், எம்மக்கள் எல்லோரும் அப்போரிற் பங்குபற்றவேண்டும். பெண்மணிகளும் அப்போரில் ஈடுபடவேண்டும். எத்துணைத்தியாகத்தையுஞ் செய்யஆயத்தமாயிருத்தல்வேண்டும். எம்முயிரைத்தானும் சுதந்தரதேவியின் பாதங்களில் அர்ப்பணஞ் செய்ய முன்வரவேண்டும்.

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஆங்கிரசஹு
ஆடிமீ உ0உ வியாழக்கிழமை.

## ஐயோ! வயிற்றில் அடிக்கலாமா?

1

தொழிலின்மை பணமுட்டு என்னும் இவைகளினுற் கஷ்டப்படுஞ் சனங்களுக்கு, உணவுக்காகிய பொருள்களும் உடைக்குரிய பொருள்களும் வாழ்க்கைக்கு இன்றியமையா ஏனைய பொருள்களும் விலைகுறைந்திருந்தலினுலே இச்சனங்கள் சிறிது குறைந்த கஷ்டத்தோடாயினும் சீவியஞ்செய்துவருகின்றனர். ஆனுல் இப்பொழுது ஒரு பெரிய கஷ்டம் சனங்களுக்கு ஏற்படும்போற் காணப்படுகின்றது; அடுத்த வருடப் பரிபாலனச் செலவுத் திட்டத்தின்படி அரசினருக்கு இன்னமுஞ் செலவிற்குப் பணம் வேண்டியிருப்பதால் அரசினர் இந்தியா முதலிய புறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு ஒரு அந்தர் நிறைக்கு 1 ருபா விகிதமும், 1 அந்தர் நிறைகொண்ட நெல்லுக்கு 50 சத விகிதமும் இறக்குமதித்தீர்வையை மேலதிகமாக விதித்து அந்த வரிப்பணம் வாயிலாக பரிபாலனச் செலவிலுள்ள குறைவைச் சரி செய்வதற்குத் தேசாதிபதி நோக்கங்கொண்டிருக்கின்ருர்.

இந்தத் தேசாதிபதி இப்பொழுது கொண்டுள்ள இந்நோக்கம் நீதியானதோ என்பதே ஆசங்கை இவ்விலங்கை நாடு அரிசி நெல் முதலிய உணவுப்பொருள்கள் விஷயத்தில் அந்நிய நாட்டையே ஏறக்குறைய முழுவதும் எதிர்பார்த்திருப்பதாகும். இப்படி உணவுப் பொருள்கள் பொருட்டு அந்நிய நாட்டினை இலங்கை காத்திருக்கவேண்டி ஏற்பட்டது நமது காருண்ணியம் பொருந்திய ஆங்கில அரசினரின் பரிபாலன காலந் தொடக்கமாகவே யென்பது இலங்கைச் சரித்திரத்தை நுட்பமாகப் படிப்பாரெவர்க்கும் நன்கு புலப்படுமல்லவா? அரசி நெல் போதியளவில்லாத இலங்கை நாட்டிற்கு வரும் அரிசி நெல்லில் இறக்குமதித் தீர்வை விதித்தால் இது யாரில் வந்து தாக்கும்? ஏழைகள் செல்வர்கள் பாலர்கள் விருத்தர்கள் பெண்கள் ஆண்கள் குருடர் முடவர் சப்பாணிகள் செவிடர் ஊமர் நோயாளிகள் என்ற பேதமின்றி எல்லாரையுந் தாக்குமல்லவா? சுருங்கச் சொல்லுகில் இங்கே உணவுண்ணும் எல்லாரையும் வந்து தாக்குமல்லவா? இப்படியிருக்கத் தேசாதிபதி பிரதான உணவுப் பொருளாகிய அரிசி நெல்லிற்ருன் இந்தக் கஷ்டமான காலத்திலே வரி விதிக்கத் துணிந்தமை யென்னையோ?

தேசாதிபதி அரிசி நெல் என்னும் இவைகளில் இறக்குமதித் தீர்வைவிதிக்கவேண்டுமெனத்தாம் உத்தேசித்தற்கு நியாயம், உள்ளூரில் அரிசி நெல்லை விருத்திபண்ணவேண்டுமென்றுசொல்லுவரேல்,உள்ளூரில்வேண்டிய அரிசியும்நெல்லும் அகப்படத்தக்கதாயிருப்ப, விலை குறைவு என்ற காரணம்பற்றி, ஊரவர்கள் உள்ளூர்த் தானியத்தை அலட்சியஞ்செய்து வெளியூரிலிருந்துவரும் அரிசிநெல்லை வாங்கப் புகுந்தனரேல், அரசினர் இப்படி இறக்குமதி வரியை ஏற்றி விதித்து உள்ளூர் விளைவை விருத்திபண்ணலாமே யொழிய, இங்கே வருடத்தில் மூன்று நாலு மாசச் செலவிற்கும் இங்குள்ள அரிசி நெல் போதாமலிருப்ப, அந்நிய நாட்டிலிருந்துவரும் அரிசி நெல்லுக்குத் தீர்வையை உயர்த்தவேண்டுமென நிற்றல் சிறிதும் பொருத்தமானதா? எவ்வளவு விலை யேறினுலும் சனங்கள் உயிரோடிருக்க விரும்பினுல் இந்திய அரிசி நெல்லை அதிக விலைகொடுத்தாயினும் வாங்கத்தானே வேண்டும்.

அரசினர், தாம் நேரே கமத்தொழில் கைத்தொழில்களை விருத்திபண்ணும் விஷயத்தில் துணைச்செய்தாலொழிய, இங்குள்ள கமத்தொழிலாளர் கைத்தொழிலாளர் அவற்றை விருத்திசெய்ய முடியாத நிலையிலல்லவா வைக்கப்பட்டிருக்கிருர்கள்? இற்றைக்குப் 15 வருடங்கட்கு முன் முடிவெட்டி அரிசி விற்ற காலத்திலும் அதற்குப் பின்னும் கமத்தொழிலை விருத்திசெய்ய முடியாத, நன்னிலைப்படுத்த நோக்கங்கொள்ளாத நமது கமக்காரர் இப்பொழுது இந்தத் தீர்வை ஏற்றுவதால் விருத்திசெய்வார்களென நமது தேசாதிபதி காத்திருப்பது அசம்பாவிதமல்லவா? கமத்தொழில் கைத்தொழில்களை வெறுப்பதற்கும் கமக்காரா கைத்தொழிலாளரைப் புறக்கணிப்பதற்குமாகிய கல்வியை இங்குள்ளார்க்கு ஊட்டிவருவதும் எங்கள் அரசினர்தான். அல்லாமலும் உணவுக்கு இன்றியமையாப் பொருள்களில் வரி விதிக்கக்கூடாது. விதித்திருந்தால் உயர்த்தக்கூடாது என்ற கொள்கை இந்தக் காலத்தில் சீர்திருந்திய அரசினர் எவர்மாட்டுங் காணப்பட நமது தேசாதிபதி மாத்திரம் இப்படி விபரீத கொள்கை பூண்டது எற்றுக்கோ யாமறியேம்.

அரிசி நெல் என்னுமிவைகள்மீது இறக்குமதி வரியை ஏற்றுவதனுல் வருந்தீமை இவ்வளவோடு மாத்திரம்நின்றுவிடுமோ? இல்லை! இல்லை. அரிசி நெற்களின் விலை ஏற, இது காரணமாக இங்குச் செய்யப்படும் தினை சாமை வரகு குரக்கன் முதலாம் சிறு தானியங்களின் விலையும் இன்னும் மரவெள்ளி பனையோடியல் முதலிய உணவுப் பொருள்களின் விலையும் ஏறிவிடும். இது எக்காலத்தும் அநுபவத்திற்கண்டதாகும்.

இப்பொழுதே அரிசி நெல் என்னுமிவைகளின்மீது இறக்குமதித்தீர்வை கூட்டப்படுமென வதந்தி பிறப்பதற்கிடையில், இங்கும் கொழும்பு முதலாமிடங்களிலும் அரிசி நெல்லின் விலையேறிக்கொண்டன. ஒரு அந்தர் அரிசிக்கு 1ருபா தீர்வை மேலதிகமாக விதிக்கப்படும்போது 1படி அரிசிக்குக் அரைச்சதம் விகிதந்தான் விலையேறும். ஆனுல் வியாபாரிமார் இப்பொழுதே 1படி அரிசிக்கு 2 சதம் வரையிற் கூட்டிவிற்கத் தொடங்கிவிட்டார்கள். சுருங்கச் சொல்லுகில் அரிசி நெற்களில் இறக்குமதித்தீர்வையை அதிகப்படுத்துவதனுல் நமது தேசாதிபதியவர்கள் பணப்பஞ்சம் தொழிற்பஞ்சம் உத்தியோகப் பஞ்சம் என்னும் மூவகைப் பஞ்சத்துடன் உணவுப் பொருட் பஞ்சத்தையும் தேடிவிடுபவராவரென்பது நிசம்.

இவ்விஷயமாக அடுத்த பிரசுரத்திலும் சில கூறுவேம்.

## வல்லை வெளியிற் சிங்களப் பெண்ணின் கொலை.

*(1) நாவிதன் ஞானமுத்து, (2) கயித்தான் இளையவன், (3) நாவிதன கணபதி என்னும் மூவர் எல்லி என்னுமொரு சிங்களப் பெண்ணைக் கொலைசெய்தனரென்று குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் பிரத்தியேக நீதிபதியாகிய மிஸ்ரர் சைமன் ரெட்றிகோ என்பவரால் விசாரணை செய்யப்பட்டது. முதலா மெதிரியாகிய ஞானமுத்து என்பவனுக்கு நியாயதுரந்தரர் ஸ்ரீ G G பொன்னம்பலம் ஏற்பட்டுள்ளனர். ஏனைய இரு எதிரிகளுக்கும் நியாயவாதிகள் ஏற்படவில்லை.*

### மோட்டர்ரதச் சாரதி K. முருகேசு சொன்ன சாட்சியம்.

நீதிபதி— *சாட்சியைப் பார்த்து) நீ குற்றவாளியாக இங்கே அழைக்கப்படவில்லை; சாட்சியாக அழைக்கப்பட்டிருக்கிருயென்பதை விளங்கிக்கொண்டு சாட்சியஞ் சொல்லு*

சாட்சியம் வருமாறு.

*"நான் இராசாவின்தோட்டத்தில் வசிக்கிறேன்; ஜூன் மாசம் 22-ந் தேதி நடந்த விஷயங்கள் என் ஞாபகத்தி லிருக்கின்றன; அன்றிரவு நான் படக்காட்சிக்குப் போயிருந்தேன்; பெருந்தெருவில் தன்னுடைய சாய்ப்பு வாசலில் ஞானமுத்து தான் நிற்கக் கண்டேன்; படக்காட்சிக்கு வருகிருயோ என்று ஞானமுத்துவைக் கேட்டேன்; தான் வரவில்லையென்றும், தனக்கு வேறேதோ அவசியமான கருமமிருக்கிறதென்றுக் தெரிவித்தான்; நான் அப்பாற் போகத் தொடங்கியபோது சாய்ப்பினுள் ஒரு சிங்களப்பெண் நிற்கக் கண்டேன்; ஞானமுத்து வாசலில் நின்றபடியால் நான சாய்ப்பினுள்ளே போகவில்லை; இந்தச் சிங்களப்பெண் யாரென நான் கேட்டபோது பொன்னையா என்னுமொருவருடைய வேலைக்காரப் பெண்ணெனவும், பொன்னையாவின் மனைவிக்கும் இந்தப் பெண்ணுக்கு மிடையே ஏதோ பிணக்கு வந்தமையினுல் இவளை ஊருக்கு அனுப்புவதாகக் கொண்டுவந்து விட்டிருப்பதாகவும் ஞானமுத்து சொன்னுன்; நான் அதனைக் கேட்டுக்கொண்டு படக்காட்சிக்குப்போய் அதன்பின் நேரஞ்செல்ல வீட்டிற்கு மீண்டேன்.*

*ஜூன் மாசம் 24-ந் திகதி பின்னேரம் ஐந்து ஆறு மணிவரையில் ஞானமுத்து என் வீட்டிற்கு வந்து தனக்கு ஒரு மோட்டர்ரதம் விடவேண்டுமென்று கேட்டான்; என்னுடைய 'கார்' அஞ்சாறு மாசங்களாய்ப் பழுதுபட்டுக் கிடக்கிறதென்றும், விடமுடியாதென்றுஞ் சொன்னேன்; வேறு யாரிடத்திலாயினும் ஒரு 'கார்' ஒழுங்குபண்ண முடியுமோ என்று ஞானமுத்து கேட்க இப்பொழுது வசதியில்லையென்று நான் சொன்னேன்; சிறிது செல்லத் தான் மீண்டு என்னிடம் வருவதாகவும், என்னை எங்கேனும் போகவேண்டாமென்றுஞ் சொல்லிவிட்டு ஞானமுத்து போய்விட்டான்; கன்னாதிட்டிக்குச் செல்லும் மார்க்கமாகத்தான் அவன் அப்பொழுது போனுன்.*

*சிறிதுநேரஞ்செல்ல அதாவது 10 மணிவரையில் ஞானமுத்து மீண்டு என்னிடம் வந்து தன்னுடன் கூடிக்கொண்டு வரும்படி கேட்க நானும் போனேன்; ரோயல் தியேட்டர் (நாடக மண்டபச்) சந்திவரையிற் கூடிக்கொண்டு போனுேம்; போனவுடன் என்னை அந்தச் சந்தியில் நிற்கவிட்டு ஞானமுத்து வடக்குநோக்கி கன்னாதிட்டிப் பக்கமாகப் போனுன்; சற்று நேரஞ் செல்ல மீண்டுவந்து சந்திக்கணித்தாக நிற்கும் ஒரு மோட்டர்ரதத்தைச் சுட்டிக்காட்டி அதனைத் தன் சாய்ப்பிற்குச் செலுத்திக் கொண்டுவரும்படி என்னைக் கேட்டான்; 'கார்' சந்தியின் வடமேற்குப்புறமாக கிழக்குநோக்கி நின்றது.*

நீதிபதி — *நீ உன்னுடைய வீட்டிலிருந்து குறித்த சந்திக்குப் போவதற்கிடையில் ஏதும் விசேஷம் நடந்ததா?—ஓம், ஞானமுத்து தன் மடியுளிருந்து ஒரு சாராயப்போத்தலை எடுத்து எனக்குக் குடிக்கத் தந்தான்; அதன்பின் நான் ரதத்தைச் செலுத்தி ஞானமுத்துவின் சாய்ப்புக்குக் கொண்டுபோனேன்.*

*உடனே ஞானமுத்து இறங்கிச் சாய்ப்பைத்திறந்து உள்ளிருக்கும் மின்சார வெளிச்சத்தை எரியச்செய்தன். அங்கே 2-ம் 3-ம் எதிரிகளாகிய இளையவனும் கணபதியும் நின்ருர்கள்; அவர்களுக்கு ஏதோ சொல்லிவிட்டு ஞானமுத்து எரிந்த வெளிச்சத்தை அவித்துவிட்டான். இளையவன் வெளியே வந்து அங்குமிங்கும் பார்த்துவிட்டு மீண்டு சாய்ப்பினுட் போனுன்.*

*அதன்பின் ஒரு பெரிய மூடையை மூன்றுபேருஞ் சுமந்து கொண்டுவந்தார்கள். அது சாக்கினுலோ பாயினுலோ பொதியப்பட்டிருந்தது; அதனைக் கொண்டுவந்து ரதத்தில் ஏற்றினுர்கள்; பின்பு ஞானமுத்தனும் இளையவனும் வேறு ஏதோ கொண்டுவந்தார்கள்; அதனையும் ரதத்தில் ஏற்றினுர்கள்; இது முந்தியதைக் காட்டிலுஞ் சிறியதாய்க் காணப்பட்டது; பின் மூன்றுபேரும் ரதத்தில் ஏறினுர்கள்; நான் ரதத்தை எங்கே கொண்டுபோவதென்று கேட்க, நவக்கிரிக்குக் கொண்டுபோ என்று ஞானமுத்து சொன்னுன். சாய்ப்பிலிருந்து ரதம் புறப்படும்போது இரவு பத்தரை மணிவரையி லிருக்கும்.*

*வலெழுச் சந்தியில் அதாவது நவக்கிரிக்கு ஒருமைல் இப்பால் ரதம் போகும்போது ஞானமுத்து ரதத்தை நிறுத்தும்படி சொல்ல நான் அப்படியே செய்தேன் எங்களுக்கு எதிரில் அரைமைல் தூரத்தில் வெளிச்சமும் சனக்கூட்டமும் வரக் காணப்பட்டன.*

*அந்தத் தெரு நிலாவரைக்குப் போகும் மார்க்கமென்பது எனக்குத் தெரியும். நிலாவரைக்கும் நாங்கள் ரதத்தை நிறுத்திய சந்திக்குமிடையேயுள்ள தூரம் ஒரு மைல்தா னிருக்கும்.*

*வெளிச்சத்தையும் சனக்கூட்டத்தையும் கண்டவுடனே ஞானமுத்து ரதத்தை வல்லைவெளிப் பாலத்திற்குத் திருப்பிக் கொண்டுபோகும்படி சொன்னுன். அந்த இரண்டுபொதிகளும் என்ன என்பது எனக்குத் தெரியாது. அப்படியே திருப்ப எல்லாரும் ரதத்திற் பழையபடி ஏறினுர்கள். பாலத்தண்டை போனவுடனே ஞானமுத்து ரதத்தை நிறுத்தும்படி சொல்ல நான் அப்படியே செய்தேன்; மூன்றுபேரும் ரதத்தை விட்டு இறங்கி இரு பொதிகளையும் ரோட்டருகில் இறக்கிவைத்துவிட்டு ரதத்தைத் திருப்பிக்கொண்டுபோகச் சொன்னுர்கள்; நான் திருப்பிச் சிறிது தூரத்தில் ரதத்தை வைத்துக்கொண்டு நிற்க அவர்கள் சிறிது நேரத்தால் மீண்டுவந்து ரதத்தில் ஏறிக்கொண்டு என்னைச் செலுத்தச்சொன்னுர்கள். அந்த மூட்டைகளிரண்டையும் காணவில்லையே என்று நான் கேட்டபோது, அவை ஏதோ களவுப் பொருள்களென்றும் அவைகளைப்பற்றி என்னை யொன்றும் விசாரிக்க வேண்டாமென்றும் சொல்லி ஞானமுத்து பின்பும் கொஞ்சச் சாராயங் குடிக்கத் தந்தான்.*

*அந்தப் பொதிகளைத் தாம் என்ன செய்தார்களென்பதை அவர்கள் எனக்குச் சொல்லவில்லை; தன் சாய்ப்புக்கு வந்தவுடன் ஞானமுத்து ஒரு ஐந்துருபா நோட்டை எனக்குத் தர நான் வாங்கிக்கொண்டு என் வீட்டிற்குப் போய்ப் படுத்துறங்கினேன்.*

*இது நடந்து இரண்டுநாட்கள் சென்றபின ஞானமுத்துவைப் பாசலூரிற் கண்டேன்; இதைப்பற்றிக் கேட்டபோது அது சிங்களப் பெட்டையின் பிரேதமென்றும், அதனைத்தான் வல்லையிற்பாலத்தின் கீழ் அன்றிரவு கொண்டுபோய்ப் போட்டதென்றும் ஞானமுத்து சொன்னுன். அதைப்பற்றி யாருங் கேட்டால் ஒன்றும் வெளியிடவொண்ணுதென்றும், அப்படி வெளியிட்டால் எனக்குப் பெரிய சங்கடம் வருமென்றும் சொல்லி 10 ருபாவுந் தந்தான். என்னை யாழ்ப்பாணப் பட்டினத்திற் சில நாளைக்கு நிற்கவேண்டாமென்று அவர்கள் சொன்னதால் நான் உடனே தெல்லிப்பழைக்குப்போய் அங்கே நின்றேன்"*

*இப்படிநின்று பத்துருபாவுஞ்செலவாக கணபதியிடம் காசுவாங்கலாமென மீண்டு வந்தேன்; ஞானமுத்தன் விளக்கமறியலில் இருக்கின்ருனென்றும் தன்னையும் இளையவனையும் பிடித்து அடைத்துப் பின் பிணையில் விட்டிருக்கிருர்களென்றும் கணபதி சொன்னுன் ஜூன் மாதம் 22-ந்தேதி நான் சாய்ப்பில் கண்ட பெண்ணைத்தான் பின் பிரேதமாகக் கொண்டுபோய் வல்லைவெளிப் பாலத்தின்கீழ்ப் போட்டதென்று ஞானமுத்தன் எனக்குச் சொல்லவில்லை*

*இவ்வளவில் விசாரணை தவணையிடப்பட்டது.*

## ஒப்புக்கொள்ளுகின்றீர்களா? ஒடிப்போகின்றீர்களா?

### தேசாதிபதியின் கட்டளை.

*அரசினர் அதிகாரிகளுக்கு மொத்த உபகாரச் சம்பளம் கொடுக்கவேண்டிய விஷயமாக மந்திரசபையாரின் வேண்டுகோள் தேசாதிபதியால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. உத்தியோகத்தரின் உபகாரச் சம்பளத்திற் கைவைக்கக்கூடாதென்றும் தமது உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து நடந்துகொளவதாயிருந்தால் மந்திரிகள் தங்கள் பதவிகளில் இருந்துவரலாமென்றும், தமக்குக் கீழ்ப்படிய இஷ்டமில்லாவிடில் இராஜீநாமாச் செய்துவிட்டு வெளியேறிவிடலாமென்றும் தேசாதிபதியவர்கள் மந்திரசபையினர்க்கு அறிவித்தல்கொடுத்திருக்கிருர்.*

## யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோட்டு விசாரணை.

*இரண்டாவதாக சாவகச்சேரியில் உள்ள "ஸ்ரீ வல்லிபுரம் மில்ஸ்" எனப்படும் யந்திரசாலையிற் கடமை பார்த்த கந்தவனம், வினைதீர்த்தபிள்ளை, ஏகாம்பரம் என்னும் மூவர் பொய்க்கணக்குத் தயாரித்து குறித்த ஓர் தொகைப் பணத்தைக் களவாடினுர்கள் என்ற வழ்க்கு விசாரணை செய்யப்பட்டது. இவ்வழக்கு சென்ற ஜூலைமாதம் 25-ந் தேதி ஆரம்பமாகி இந்த ஆகஸ்ட்மாதம் 3-ந் தேதிவரைக்கும் நடைபெற்றது. விசாரணை முடிவில், முதலாவது எதிரியாகிய கந்தவனம் என்பவர் 5 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். 2வது எதிரியான வினைதீர்த்தபிள்ளை விடுதலைபடைந்தார். 3வது எதிரியான ஏகாம்பரம் குற்றத்தை ஒத்துக்கொண்டார், அவர் 2 வருட நன்னடத்தைப்பிணையில் விடப்பெற்றனர்.*

## அரசாங்கசபைப் பகிஷ்காரம்.

### அதனைத் தற்போது ஒழிப்பது இல்லை.

#### வாலிபர்மகாநாட்டின் தீர்மானம்.

*சென்ற வியாழக்கிழமை யிரவு வைத்தியேசுவர வித்தியாலய மண்டபத்தில் யாழ்ப்பாணம் வாலிபர்மகாநாட்டின் காரியநிருவாகசபை ஒன்று ஸ்ரீ T. C. இராசரத்தினம் அவர்களின் தலைமையின்கீழ் கூடிற்று. பெரும்பான்மையான அங்கத்தவர்கள் சமுகமாயிருந்தனர். உத்தியோகார்த்தமாக இங்கு வந்திருந்த மிதவாதிகள்சங்கத் தலைவர் மிஸ்ரர் பிரான்ஸிஸ் டீ. சொய்சா அவர்களும் கூட்டத்திற் சமுகமாயிருந்தனர்.*

*யாழ்ப்பாணத்தாருட் கோடரிக்காம்பனையார் சிலர் பகிஷ்காரத்தை ஒழிப்பதற்காக ஓர் மகாநாடு கூட்ட எத்தனிப்பதை யிட்டுப் பெரும் விவாதம் நடந்தது. அவர்களின் பிரயத்தனங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை வாலிபர்மகாநாடு கைக்கொள்ளவேண்டும் என்னும் கருத்துக்கொண்ட ஓர் தீர்மானம் நிறைவேறியது.*

*வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தமிழர்களுக்கு வேண்டும் என வாதாடுவோர் சிலரின் செயலை அங்கத்தவர்கள் பலர் கண்டித்தனர்.*

## உலகம் பலவிதம்.

*(இற்றைப் பிரசுரத்திலும் இடமின்மையால் விடப்பட்டது.)*

### திருத்திக்கொள்க.

சென்ற திங்கட்கிழமை (1-8-32)ப் பிரசுரத்தில் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 1536-ம் வழக்கு இலக்கத்தின் காணிவிற்பனவு விளம்பரத்தில் 1932-ம் ஆண்டு ஆவணிமீ 20உ யென்றிருப்பதை 1932-ம் ஆண்டு ஆவணிமீ 29உ யெனத் திருத்திக்கொள்க.

# அகில இலங்கை அரசியல் விவகார மகாநாடு.

## "ஒத்துழையாமையைக் கைக்கொள்ளவேண்டும்"

### "இதுவே வாய்த்த தருணம்"

### "நாங்கள் தவழும் அடிமைகளானோம்".

மிஸ்ரர் விருன்ஸிஸ், டீ சோயிசா, K. C சென்ற சனிக்கிழமை (30-7-32) மேற்படி மகாநாட்டில் தலைமை வகித்தபோது செய்த பிரசங்கத்தின் சாரம்:-

"சகோதரிகளே, சகோதரர்களே, இந்த மகாநாடு இன்னுஞ் சிலநாட்கள் கழித்துக் கூடவேண்டியதென உத்தேசித்திருந்தோம். ஆனால் இப்பொழுது நேர்ந்துள்ள சில விசேஷ சந்தர்ப்பங் காரணமாக இது இன்றைக்குக் கூட்டவேண்டி ஏற்பட்டது. இப்படி அவசரமாகக் கூட்டப்பட்டமையினால் நமது அங்கத்தவர்கள் சிலர் இன்று சமுகஞ்செய்ய வாய்க்கவில்லையென்பது மெய்யே. அவர்கள் சமுகஞ்செய்யாவிட்டாலும் அவர்கள் மனமும் அபிமானமும் இங்குச் சமுகமாயுள்ளன. இப்பொழுது அரசியல் விவகாரங்கள் அடைந்திருக்கும் சங்கடமான நிலைமையை உத்தேசிக்குமிடத்து நாங்கள் முன்னரைக் காட்டிலும் இருமடங்கு முயற்சியோடும் ஊக்கத்தோடும் உழைக்கவேண்டியிருக்கின்றது. "டொமினியன் ஸ்ராற்றஸ்" எனப்படும் சனப்பொறுப்பு அரசாட்சி முறையை நான் முன்னர் எடுத்து விளக்கவில்லையெனச் சிலர் என்னைக் குறைகூறுகின்றார்கள்; அதனை விளக்குவது அப்பொழுது அவசியமில்லையென நினைத்தேன்; இப்பொழுதும் அப்படியே நினைக்கின்றேன்; எங்களுடைய நோக்கம் என்ன என்பதை நீங்கள் எல்லாரும் அறிவீர்கள். அந்த நோக்கத்தை அறிந்தபின்பே நீங்களும் எங்களுடன் ஒத்துழைக்க வந்துள்ளீர்கள் ஆனால் "டொமினியன் ஸ்ராட்டஸ்" என்ற முறையைப் பற்றி வெளியில் அநேகர் அறியார்கள்போற் புலப்படுகின்றது. பத்திரிகைகட்கு விஷயதானஞ் செய்வோருள்ளும் பலர் அறியார்கள்; தங்களுக்கு எல்லாந் தெரியுமென்றும் எல்லாமறிந்தவர்கள் தங்களைவிட எவருமில்லையென்றும் வீண் செருக்குக்கொண்டிருக்கும் அரசாங்கசபை அங்கத்தவர்களுள்ளுஞ் சிலர் அதனை உள்ளபடி விளங்கிக் கொள்ளவில்லையெனத் தெரிகிறது. சுருக்கமாகச் சொல்லுகிறேன் கேளுங்கள். நாங்கள் எங்களுக்கு "டொமினியன் ஸ்ராற்றஸ்" என்னும் அரசுரிமையைக் கேட்டதன் அர்த்தமென்னவென்றால் இங்கிலாந்தில் ஆங்கிலரை ஆளும் முறையிலேயே எங்களையும் இங்கேவைத்து ஆளவேணுமென்பதேயாம். மிஸ்ரர் E. W. பெரீரு அரசாங்கசபையில் சனப்பொறுப்பாட்சி முறை வேண்டுமென்று ஓலமிட்டதும் இதனையேயாம். சனப்பொறுப்பாட்சி முறையும் 'டொமினியன் ஸ்ராற்றஸ்' முறையும் பேதமுள்ளன என நீங்கள் எண்ணினால், இவை இரண்டும் எங்களுக்கு வேண்டுமேயல்லாமல் ஒன்றின்றி ஒன்றுமாத்திரம் போதியதல்ல என்பதே என்னுடைய எண்ணம்.

"டொமினியன் ஸ்ராற்றஸ்" எனப்படும் இந்த அரசியற் சமத்துவம் சன ஆட்சிப் பொறுப்பில்லையேல் பூரணமடையமாட்டாது இவைகளிரண்டனுள் ஒன்றுமாத்திரம் ஏற்றுக்கொள்ளச் சொன்னால் அப்படி ஏற்பதற்கு நான் ஒருபோதும் உடன்படமாட்டேன். நாங்கள் மிகவும் அவசரப்படுகிறோமென்று ஒருபகுதியார் எங்களைக் குற்றஞ்சொல்லுகிறார்கள்; இவர்கள் சென்ற 25 வருடகாலமாக இப்படிக் குற்றஞ்சொல்லுகிறார்களேயல்லாமல் வேறு ஏதும், பொதுநன்மையான முயற்சி செய்ததாகக் காணவில்லை. மிஸ்ரர் சேனநாயகா, அன்று அரசாங்கசபையிற் பேசியபோது "மனுஷர்போல் நடவுங்கள்; அவசரப்படாதீர்கள்; மெல்ல மெல்லப் போங்கள்" என்று எங்களைப்பற்றிப் பேசியுள்ளாராம். மெல்லமெல்லப் போவது மாத்திரந்தான் மனுஷராயிருத்தற்கு அடையாளமென்பது அவர்கொள்கை போலும் அரசாங்க சமத்துவத்தை நாங்கள் விரும்புகிறோமென்று ஸேர். ஜயதிலக எங்களைக் குறைகூறிப் பரிகசித்துள்ளார்; இவர்கள் இந்த விஷயமாகவே எங்களைக் காட்டிலும் பதின்மடங்கு ஊக்கத்தோடு சிலகாலத்திற்கு முன் இந்தச் சமத்துவ அதிகாரத்தின் பொருட்டு அரசினரோடு வாதாடியவர்கள்; ஆனால் இப்பொழுது நிலை மாறி நிற்கின்றார்கள்; சில பத்திரிகைகள் எங்களை முதல் தவழ்ந்து, பின் நடந்து, பின்புதான் ஓடப்பழக வேண்டுமென்கிறார்கள்; நாங்களோ நூற்றுக்கு மேற்பட்ட வருஷங்களாகத்தானே தவழுகிறோம்; இன்னுந் தவழ்ப்பழகி முடியவில்லையே; ஆனால் ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள். அரசாங்கசபை மந்திரிமார்களுட் சிலர் நம்மைப்போலத் தவழ்வது மாத்திரமல்ல வயிறு நிலத்தில் அரைபட நகருவதற்கும் பழகியிருக்கிறார்கள்; எதற்கு? சில விண்பட்டங்களைப் பெறுவதற்காகத்தான்.

ஆகலால், நான் சொல்வதென்னவெனில், எங்கள் தலைவர்கள் எந்தச் சமயத்தவர்களாயினுமாகுக, எந்தச்சாதியினராயினுமாகுக, இந்த நாட்டைத் தங்களுடைய சொந்த நாடென்று அபிமானித்துச் சனங்களாகிய எங்களுடன் நின்று ஒத்துழைக்கக்கூடியவர்களாயிருத்தல் வேண்டும். நூற்றுக்கு மேற்பட்ட வருடங்களாகப் பிருத்தானியர் எங்களைப் பரிபாலித்து வருகிறார்கள். ஆனால் தங்கள் நன்மை கருதியே அவர்கள் பரிபாலித்து வருகிறார்கள்; அப்படியல்ல இந்த நாட்டை இந்நாட்டவர்களின் நன்மையை உத்தேசித்துப் பரிபாலிக்கவேண்டுமென்று நாங்கள் சொல்லப்போனால் அதிகாரிகள் கோபிக்கிறார்கள். "நாங்கள்" என்ற சொல்லில் நான் சாதிபேதம் மதபேதமின்றி இலங்கைவாசிகளெல்லாரையுமே குறித்துச் சொல்லுகிறேன்; ஆனால் நாங்கள் உண்மையிற் குடிசனங்களல்லேம்; அடிமைகளாவேம்.

மிஸ்ரர் E. W. பெரீரு அரசாங்கசபையிற் செய்த பிரேரணைகளுட் பிரதானமானது: இலங்கை மக்களுக்குச் சமத்துவமான அரசியற் பொறுப்பாட்சி வேண்டுமென்பதே; இதற்கு மாறாக அரசாங்கசபை அங்கத்தவர்கள் பலர் நின்றமையினால் இப்பிரேரணை நிறைவேறத் தவறியது. நமது நாட்டினரெல்லாரும் மிஸ்ரர் பெரீருவின் பிரேரணையையே ஆதரிக்கவேண்டும். அவருடைய இந்தப் பிரேரணை நிறைவேறாதொழிந்தமை மிகவும் மனவருத்தமான காரியம்.'

மிஸ்ரர் பண்டாரநாயக்க: அது அபிப்பிராய பேதமல்லாமல் வேறொன்றுமல்ல;

சபைத்தலைவர்: நானும் என்னுடைய அபிப்பிராயத்தை வெளியிடுகிறேனேயல்லாமல், இன்னொருவருடைய எண்ணத்தை இங்கே சொல்லவில்லை;

மிஸ்ரர் பண்டாரநாயக: இந்த மகாநாடு குழப்பமில்லாமல் நடைபெற வேண்டுமானால், நீர் இப்படி ஒவ்வொருவருக்கும் நோக்கம் கற்பித்துப் பேசுவது சரியல்ல;

சபையிலிருந்து ஒரு சத்தம்: நீர் அவரை வெருட்ட வேண்டாம்; உம்முடைய கொள்கைதான் தவறானது;

இந்த விஷயமாக அபிப்பிராயபேதம் அதிகமிருப்பதால் நான் இப்பொழுது இதனைப்பற்றி அதிகஞ் சொல்லவரவில்லை. ஆனால் நான் சொல்லத்தக்கது ஒன்றுண்டு. ஊரவர்களின் அபிப்பிராயம் வேறு, அரசாங்கசபைப் பிரதிநிதிகளின் அபிப்பிராயம் வேறு; எங்களுடைய அபிப்பிராயம் சரியோ இல்லையேல் அரசாங்கசபை அங்கத்தவர்களின் அபிப்பிராயஞ் சரியோவென்பது காலகதியில் தெரியும். அரசாங்கசபையிலே சில நாட்களின் முன்னர் நடந்த இருபெரும் பிழைகள் உண்டு. ஒன்று மேஜர்வின் என்பவருடைய சம்பள விஷயம்; மற்றது விவசாய விஷயமானது;.............

தேசாதிபதி அடுத்த வருடப் பரிபாலனச் செலவுத்திட்டத்தை தாம் பிரேரித்தபடி திட்டஞ் செய்யச்சொல்லி மந்திரிமாருக்குத் தெரிவித்துள்ளாரெனப் புதினப் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றது; இப்படிச் செய்யாவிட்டால் இவர்கள் மேற்படி சபையைவிட்டு விலகவேண்டிவரும்; இந்த விஷயத்தில் மந்திரிமார் என்னசெய்யப்போகிறார்களென்பது தெரியாது. அரசாங்கசபை அங்கத்தவர் சிலர் சபையைக்கலைத்து இரண்டாமுறை தெரிவிற்கு நிற்பது புத்தியல்லவென்றும் ஏதோ சமாதான ஒழுங்கு செய்ய வேண்டுமென்றும் மந்திரிமாருக்குத் தெரிவித்திருக்கிறார்களாம். ஆனால் மந்திரிமாரென்றிருப்போரும் அங்கத்தவர்களென்றிருப்போரும் இப்படிப் பணிந்தும் இரங்கியும் நிற்பது சரியல்ல தேசாதிபதிக்கும் மந்திரிமார் அங்கத்தவர்கட்கு மிடையில் பிணக்கு நேரும்போது பிந்திய இருபகுதியாரும் சனங்களின் அபிப்பிராயத்தை அநுசரித்து நிற்கவேண்டியதே முறை...நாடு

தொடர்ச்சி 5-ம் பக்கம்.

# ஆண்டன்மையுண்டேல் அடிமைத்தனமேது?

## கிராமப் புநருத்தாரணம்.

:0:

## அபாயம்! அபாயம்!! அபாயம்!!!

:*:

### அதனைத் தடுப்பதற்கேற்றன செய்மின்!

### வெள்ளம் வருமுன் அணைகோல வேண்டும்.

[ஸ்ரீமத் சுவாமி பவித்திரானந்தா அவர்கள் "பிரபுத்தபாரத" பத்திரிகையில் எழுதியதன் மொழிபெயர்ப்பு] (28-7-32ன் தொடர்ச்சி.)

எமது கிராமங்களில் வசிக்கும் மாந்தர்களிற் பலர் எவ்வித ஆதரவுமின்றித் தவிக்கின்றனர். அவர்களுக்கு நாம் ஆதரவு அளிக்கவேண்டும். அறியாமையென்னும் அந்தகாரத்தில் நம் கிராம மக்கள் அமிழ்ந்திக்கிடக்கின்றனர். வெளியே என்ன நடக்கின்றன என்பதை அவர்கள் அறியார்கள். தங்களுக்கு நேரும் துன்பங்கள் யாவும் விதிவசத்தாலேயே நேர்ந்தன என்று விதியை நோகின்றார்கள். தமக்கு மாத்திரமல்ல உலகத்தில் உள்ள எல்லோர்க்கும் துன்பங்கள் நேருமென்பதை அவர்கள் அறியார்கள். அப்படி அறிந்தால், மற்றவர்கள் எப்படித் தம் துன்பங்களை நீக்குகின்றார்களோ அதேபோல இவர்களும் நீக்கப் பிரயத்தனப்படுவார்களே. "தெய்வத்தாலாகாதெனினு முயற்சி தன் மெய்வருத்தக் கூலிதரும்" என்ற முதுமொழியின் உண்மையை அவர்களுக்குப் போதித்தல் வேண்டும். நாமே பாடுபட்டு நாமே எம் குறைகளை நீக்கவேண்டும் என அவர்கள் உணரவேண்டும். இந்தியக் கிராமங்களில் வசிக்கும் 40 வயதினரைப் பார்த்தால் 60 வயதுக் கிழவர்போலத் தோற்றுகிறார்கள்; ஏன் அப்படி? அவர்கள் சதா பயத்துடன் இருக்கின்றனர். பட்டினியால் வாடுவோமே என்ற பயம் ஓர்பக்கம்; தொற்றுநோய்கள் பரவிவிடுமே என்ற பயம் ஓர் பக்கம்; கடன் கொடுத்த தனிகர் பயம் ஓர்பக்கம், இப்படியே எல்லாப்பக்கங்களிலும் அவர்கள் சதா பயந்தவர்களாகவேயிருக்கிறார்கள்.

"அத்தகைய பயத்தை அவர்கள் மனத்திடமிருந்து அகற்றவேண்டும். அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டவேண்டும்; நன்மைக்கேதுவான எமது புத்திமதியைக் கேட்டு அதன்படி ஒழுகி வந்தால் அவர்களும் அவர்கள் குடும்பத்தாரும் நன்கு உண்டு, உடுத்தி மனோரம்மியமாகக் காலங் கழிக்க முடியும் என்ற நம்பிக்கையை அவர்களின் மனத்திடைப் புகுத்த வேண்டும்" என்று மிஸ்ரர் பிறெயின் கூறுகிறார்.

நமது கிராமத்து மாந்தர்கள் போதிய கல்வியின்மை சுகாதாரமின்மை, வறுமை யென்னுமிவற்றால் வருந்துகிறார்கள். அவர்களுக்குக் கல்விவாசனையூட்டி சுகாதாரவழியைக் காட்டி வறுமைப்பிணியை ஓட்டிவிடுதலே இப்போது எமைப் பொறுத்த கடனாகும்.

கல்விவாசனை யூட்டவேண்டுமெனக் கூறினோர். எழுதவும் வாசிக்கவும் மாத்திரம் அவர்கள் கற்றாற் போதுமென்பது எமது கூற்றின் கருத்தல்ல. தற்போது ஊட்டப்படும் கல்விமுறை நன்மையேதும் பயக்கவில்லை யெனலாம். சோர்மாறாகத் தீமையையே விளைவித்து வருகிறது. வங்காளத்தைச்சேர்ந்த ஓர் கிராமத்தில் ஓர் பாடசாலை இருந்தது. அப்பாடசாலையிற் கற்ற பிள்ளைகள் பின் ஏர் பிடித்து உழப் பின்வாங்கினார்கள். தம் மூதாதையர் கைக்கொண்ட தொழில்களை அநுசரிக்க மறந்தனர். அதனையிட்டு அக்கிராமத்தார் எல்லோரும் "அந்தோ, இப்பாடசாலையில் ஊட்டப்படும் விபரீதக்கல்வியினால் எமது அருமருந்தன்ன காண்மூளைகள் யாவும் விருதாவாகக் காலங்கழிக்க அவாப்படுகின்றனவேயன்றி யோக்கியமான வாழ்க்கையை நடாத்தப் பிரியப்படுகின்றனவே" என்று பெருமூச்சு விட்டார்கள். காலஞ்செல்ல, அப்பாடசாலை மூடப்பட்டுவிட்டது. அப்போதுதான் அக்கிராமத்தார்கள் சந்தோஷமடைந்தனர். எழுதவும் வாசிக்கவும் மாத்திரம் கல்வி கற்றுக்கொடுத்தல் போதாது. ஆனால், இதில்இருந்து எழுதவாசிக்கப்பயிற்றுவதை நாம் வெறுக்கின்றோமென்பது கருத்தல்ல. அவை ஆரம்பக் கல்விக்கு ஆவசியகம்தான். ஆனால் வாழ்க்கைக்கின்றியமையாத சாதனங்களைப்பற்றி அறிவுறுத்தும் கல்வியே நம் கிராமமக்களுக்கு ஊட்டப்படல்வேண்டும். தாம் கற்ற கல்வியின் பயனாக் கிராமமக்கள் வாழ்க்கையைச் செவ்வனே நடாத்தக் கூடியவராய் இருத்தல் வேண்டும் இதற்குப் புத்தகப் படிப்பு ஆவசியமல்ல. கிராமப் புநருத்தாரண வேலையில் ஈடுபடுபவர், மக்களிடை சென்று பிரசங்கங்கள் சம்பாஷணை முதலியனவாயிலாகவும், தம் செய்கையாலும் அறிவுறுத்தலாம்.

கிராமத்தில் தீவிரமான முன்னேற்றத்தைச் செய்வதற்காக எடுத்தாற்போல் மாற்றங்களை உண்டாக்கவொண்ணாது. மெல்ல மெல்லவாயே திருத்தங்களைக் கொண்டுவரவேண்டும். மெல்லெனப் பாயுந்தண்ணீர் கல்லையுமுருக்குமல்லவா?

உலகசரித்திரத்தை நாம் படிக்கும்போது ஒரு விஷயம் நம் மனதிற் றெள்ளிதிற் புலப்படுகின்றது. ஒரு தேசத்தார் மிக்க துன்பத்தையடைந்துவிட்டால், அவர்கள் மனத்தில் ஒருவிதமான தீவிரக்கிளர்ச்சி உதிக்கின்றது. அவர்கள் தாம் பாடுபட்டனவற்றையெல்லாம் எண்ணி எண்ணி வருந்துகின்றார்கள். இல்லை; வருந்துகின்றார்களல்ல. தமது துன்பத்துக்கேதுவானவர்கள் என்று சொல்லப்படுபவர்கள்மீது கோபங்கொள்ளுகிறார்கள். கோபங்கொண்டு சமுகத்திடையுள்ள எல்லாவற்றையும், அவை நன்மை பயப்பனவாயினும் சரி, தீமை பயப்பனவாயினும் சரி, சாதிபேதம் பாராட்டாது அழிக்க முன்வருகிறார்கள். சமுகப் பழக்க வழக்கங்களையெல்லாம் இருந்தவிடந் தெரியாவண்ணம் ஒழித்துவிடுகிறார்கள். ருஷியா தேசத்தில் நடந்த கிளர்ச்சி எமது கூற்றிற்குச் சாட்சி பகரும்.

எமது இந்தியக்கிராமமக்களின் நிலைமையோ மிக்க பரிதாபமானது. அவர்கள் எல்லாத் துன்பங்களையும் சகித்துவிட்டார்கள், தம்மை வருத்தியவர்களுக்கும், வருத்துபவர்களுக்கும், வருத்தப் போகின்றவர்களுக்கும் மாறாக அவர்கள் கிளர்ச்சிசெய்யுங் காலம் வெகு சீக்கிரத்தில் வரவும் கூடும். அக்காலம் மிக்க கிட்டேயே பொருந்தியதாயிருக்கும். அத்தகைய காலம் வருமுன், அத்தகைய அபாயம் வருமுன், தேசாலனைச் சிந்தையிற் கொண்டவர் யாவரும் கிராமப் புநருத்தாரண வேலையில் ஈடுபடுவார்களாக. பொது ஜனங்களின் நிலைமையைத் திருத்துவார்களாக. வெள்ளம் வருமுன் அணை கட்டிக்கொள்ளவேண்டியது ஆவசியகம், அன்றேல் ருஷியா முதலாம் தேயங்களில் விளைந்த அனர்த்தம் நம் பாரதநாட்டிலும் விளையும் என்பது நிசம்.

## ஓர் புதிய மதம்.

1-ம் பக்கத் தொடர்ச்சி.

முன்னர்க் கூறினோம். உண்மையையே மூலாதாரமாக மதங் கொண்டுள்ளது. உண்மை என்றும் ஒன்றுதான்; அது மாற்றப்படாதது; திருத்தப்படாதது; குறைக்கப்படாதது எக்காலத்திலாயினுஞ்சரி உண்மை ஒன்றுதான். உண்மை ஒன்று எனினும் அதை நோக்குபவர்கள் பல்வேறுவிதமாக நோக்குகின்றனர் அந்த ஓரே உண்மையைப் பல்வேறுமனிதர் பல்வேறுவகையாகப் பார்க்கும்போது பல்வேறு மதக்கொள்கைகள் உற்பத்தியாயின. அந்த உண்மையைப் பல்வேறு மனிதர் பல்வேறுவிதமாகக் கூறுவார்கள். அத்தகைய உண்மையை நாம் தான் சரியாகக் கூறுவது என்று குறித்த ஒரு மதஸ்தர்கள் கூறுவது மௌட்டிகமேயன்றி வேறு என்ன? அந்த மதஸ்தர்களின் கொள்கை அநேக நாட்களுக்கு நிற்காது. அது அழிந்துபட்டேபோகும். உண்மையானது சர்வர்க்குமுரியது; அதனுள் எல்லாம் அடங்கியதாகும். அந்தத் தர்மத்தை மூலாதாரமாகக்கொண்ட ஓர்மதம் என்றும் அழியாதது. மூடநம்பிக்கைகளையும், விதிகளையும் ஆதாரமாகக் கொண்டுள்ள ஓர் மதம் மணற்குன்றின் மேலேகட்டப்பட்டவீட்டைப்போல சீக்கிரத்தில் வீழ்ந்தழிந்துபோகும். எனவே விஞ்ஞானசாஸ்திர ஆராய்ச்சிக் கேற்றவாறாகவும், நியாயசாஸ்திரப்படியும் உண்மையை உலகோர்க்கு உள்ளவாறு அளிக்கும் மதமே சர்வருக்கும் ஓர்வழிகாட்டியாய் எஞ்ஞான்றும் நிற்கும் என்பது தெளிவு.

மனிதவாழ்க்கையின் லட்சியம் என்ன? தானும் சச்சிதானந்தமாயுள்ள வஸ்துவும் ஒன்றேயென அறிதலே மனிதவாழ்க்கையின் லட்சியமாகும். அந்த லட்சியத்தை அடைதற்குப் பற்பல இடையூறுகள் நேரிடக்கூடும். ஆனால் அதையறிதல்தான் எமது லட்சியமென்பதை நாம் என்றும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும். இடையூறுகள் நேரின் அவற்றை விலக்கி எமதுலட்சியத்தைச் சீக்கிரம் அடையப்பண்ணும் மதமே நாம் கோரும் புதியமதமாகும். அது உலோகாயுதமல்ல. அல்லது மனிதனை வணங்குவதற்கான முன்கூறப்பட்ட மதமுமல்ல. அது தர்மமதம்; எக்கொள்கையாளரும், எச்சாதியாரும், எச்சமூகத்தாரும் அதனை

## பல்வைத்திய விளம்பரம்.

கொழும்புப் பல்வைத்தியராகிய டக்டர் சின்னத்தம்பி யாழ்ப்பாணம் "றெஸ்ற் ஹவுசில்" இந்த ஆகஸ்ட் மாதம் 12-ம், 13, 14-ம தேதிகளிலும், யாரும் தேவையென அறிவித்தால் மாத்திரம் 15-ம் தேதியும் தங்கி நிற்பர்.

(Mis. 558. 4th.)

## காணிவிற்பனவு.

ரயில்வே குட்செட்டுக்குச் சமீபமாக மான்விரேட்டில் 3 பரப்புக்காணி விற்க நிச்சயித்திருப்பதால், தேவையுள்ளவர்கள் என்னிடம் அதைப்பற்றிய விபரமெல்லாம் அறிந்துகொள்ளலாம்.

முத்தையா-ஆசைப்பிள்ளை,
பிறக்கிறுசி.

(Mis 556 1&4&8th.)

# MALARIA MAHATHYLAM.

## மலேரியா மஹாதைலம்.

மலேரியாவென வழங்கும் மலைச்சுரமாகிய கொடிய சோய்க்கெனப் புதிதாக ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்டு அநேக நற்சாட்சிப்பத்திரங்கள் பெற்று மிளிரும் ஓர் சிறந்த தைலம் மலேரியா உள்ள இடங்களில் வசிப்போர்களும் இக்கொடுநோயால் வருந்துவோர்களும் வேறு எவ்விசமான எண்ணெய் உபயோகியாது, எம் "மலேரியா மஹாதைலத்தை" யே முறைப்படி உபயோகித்து வந்தால் இக்கொடுநோயால் பீடிக்கப்படமாட்டார்கள். மூளைக்குக் குளிர்ச்சியும் சுத்தவாசனையும் தரும். 3 வயதுப் பாலர்முதல் விருத்தாப்பியர்வரை உபயோகிக்கலாம்; பத்தியமில்லை. தைலம் பாவிக்கும் முறை தைலத்துடன் அனுப்பப்படும். பொதுஜன நன்மையைக் கருதியே விலை குறைக்கப்பட்டது.

24 அவுன்ஸ் போத்தல் ஒன்று விலை ரூ. 6-00.
12 அவுன்ஸ் ... ... விலை ரூ. 3 50
தபாற்செலவு பிரத்தியேகம்.

அர்கியகாடுகட்குத் தபாற்செலவு உட்பட ரூபா. 8-00. முற்பணமாயனுப்பவேண்டும்.

போ. செல்லையா,
ஆயுர்வேத வைத்தியன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

(Mis. 559. 4.)

— வலிப்புகள்
— நோவுகள்
— சுழுக்குகள்
— சிரமம் முதலிய
— ரோகங்களை

நீக்கிவிடும்.

# லிட்டில்ஸ் ஒறியண்டல் பாம்.

— இந்தியாவில்
— முதன்மையான
— தும் சிறந்ததும்.

— குறைந்தவிலையில்
— எல்லா ரசாய
— னர்களிடத்திலும்
— கடைகளிலும்
— பெறறுக்கொள்ள
— லாம்.

இதனைத்தயாரிப்பவர்கள்:

லிட்டில்ஸ் ஒறியண்டல் பாம்,
& பர்மஸியூற்றிக்கல்ஸ் லிமிட்டெட்.
தபால்பெட்டி 67,
சென்னை.

## விளம்பரம்.

கீழே குறிக்கப்பட்ட மாங்கள் பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம் உதவிவனபரிபாலனாவர்களால் யாழ்ப்பாணம் மாகோலையில் 1932-ம் ஆண்டு ஆவணிமாதம் 10-ந் திகதி புதன்கிழமை காலை 9-30 மணிக்கு விற்கப்படும்:-

Lot. I. 100 பாலைமாங்கள்
Lot. II. 30 முதிரைமாங்கள் [கள்
Lot. III. 1 டன் முதிரைத் துண்டு
Lot. IV. 200 தேக்கந்தடிகள்.

ஏனைய விபரங்கள் கவண்மேந்து (22-7-32) 'கெசற்'பத்திரிகையிலறிந்து கொள்ளலாம்.

J. D. SARGENT,
Conservator of forests.

வனபரிபாலனாது சந்தோர்,
தபால்பெட்டி 500, கொழும்பு 28-7-32.

(G. 169. 4.)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893 ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டனச்சட்டத்தின்படி லைசென்ஸ்பெற்று அடைவுபிடிக்கும் திரிகோணமலை 7 ம் செம்பர் சின்னக்கடைத் தெரு பெரியதம்பி தம்பு என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படிசட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| இல. | உ. | ரூ | ச | நகைகளின் விபரம். |
|---|---|---|---|---|
| | | | | 1930-ம் ஆ. 9-ம் மீ |
| 5244 | 11 | 32 | | பின்கோர்க்கிபடன் 6 பட்டு மணிக்கோர்வை 1 |
| 5257 | 16 | 8 | | ஒரு கல்தோடு கூட்டம் 1 |
| 5259 | 17 | 20 | | பின்கோர்க்கியுடன் கரிச மணிக்கோர்வை 1 |
| 5277 | 24 | 6 | | செவ்வந்தித் திருகுபூ 1 |
| 5289 | 29 | 40 | | பின்கோர்க்கியுடன் கரிச மணிக்கோர்வை 1 |
| | | | | 10-ம் மீ |
| 5331 | 14 | 8 | | கம்பி சுரையுடன் தோடு கூட்டம் 1 |
| 5372 | 24 | 10 | | பிள்ளை பவுண்காப்பு கூட்டம் 1 |
| | | | | 11-ம் மீ |
| 5401 | 4 | 40 | | பீலிக்காப்பு கூட்டம் 1 |
| 5420 | 11 | 50 | 04 | அமரிக்கன் டலருடன் சங்கிலி 1 |
| 5431 | 13 | 15 | 04 | வெள்ளி பாதசரம் கூட்டம் 1 |
| 5462 | 20 | 10 | | சாதா பதக்கமுடன் ஒலைச்சறடு 1 |
| | | | | 12-ம் மீ |
| 5506 | 3 | 50 | | பட்டணக்காப்பு கூட்டம் 1 |
| 5566 | 22 | 22 | | சில்மோதிரம் 1 கரிசமணிக் கோர்வை 1 |
| 5567 | 23 | 35 | | கொடியுடன் சவடி மூக்குப்பு 1 |
| 5573 | 24 | 20 | | பொன் பூரானட்டியல் 1 |
| 5602 | 31 | 6 | | செவ்வந்தித் திருகுபூ 1 |
| | | | | 1931-ம் ஆ. 1-ம் மீ. |
| 5616 | 3 | 12 | | அட்சரக்கூடு 1, கல்கொப்புச்சிமிக்கி கூட்டம் 1 |
| 5621 | 5 | 15 | | சதா பதக்கமுடன ஒலைச்சறடு 1 |
| 5630 | 6 | 9 | | 3 கல் சதாமோதிரம் 1 |
| 5651 | 13 | 30 | | திருக்கொண்டை மணிக் கோர்வை 1 |
| 5664 | 18 | 10 | 04 | பட்டணக்காப்பு 1 |
| 5695 | 26 | 110 | | பின்கோர்க்கியுடன் சங்கிலிக்கொடி 1 |
| | | | | 2-ம் மீ |
| 5707 | 5 | 10 | | சில்மோதிரம் 1 |
| 5752 | 27 | 35 | | இமிற் கல் பதக்கமுடன் சங்கிலியட்டியல் 1 |
| | | | | 4-ம் மீ. |
| 5820 | 8 | 30 | | கம்பிப்பூரானட்டியல் 1 |
| 5821 | 10 | 22 | 50 | பின்கோர்க்கியுடன்பொன் தாலிக்கொடி 1 |
| 5828 | 12 | 10 | 04 | கல்வைத்த தோடு கூட்டம் 1 |
| 5848 | 16 | 30 | 04 | மெழுகுடன் பட்டணக் காப்பு கூட்டம் 1 |
| | | | | 5-ம் மீ |
| 5891 | 10 | 55 | 04 | பின்கோர்க்கியுடன் தாலிக் கொடி 1 |
| 5893 | ,, | 50 | | முளுப்பவுண் கோர்த்த கழுத்தச்சங்கிலி 1 |
| | | | | 6-ம் மீ |
| 5941 | 7 | 100 | 04 | பூக்காப்பு சோடி 1 கம்பிப் பூரானட்டியல் 1 |
| 5949 | 10 | 38 | | முளுப்பவுனுடன் கழுத்தச்சங்கிலி 1 |
| 5950 | 12 | 80 | | கிங்கமுகக்காப்பு சோடி 1 |
| 5962 | 17 | 20 | 04 | சிவப்புக்கல் தோடு கூட்டம் 1 |
| 5987 | 30 | 45 | 04 | ½ டலருடன் கழுத்தச் சங்கிலி 1 |

விற்பனவு:- ஆங்கிரச வருஷம் ஆவணிமாதம் 3 ந் திகதிக்குச்சரியான (18-8-32) வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்ட நகை புறநீங்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாத உடையார்,
வெக்டீஸ்மேஜஸ்தர்,
திரிகோணமலை.



தங்க மெடல்கள் பெற்ற
ஐரோப்பிய மதுரைக் கம்பனியாரால்
செய்யப்படும்,
திறமான குடை அடையாளமுள்ள

# கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனியார் சிறந்த குடை அடையாளமிட்டு இந்த ஓடுகளை வெகு பணிக்காய் அமைத்திருக்கிறார்கள். வெயில், மழை, நெருப்புக்கு இதிலும் மேலான பாதுகாப்பு உபகாரணம் வேறொன்றில்லை. பல தொழில் நிபுணரின் பரிசோதனையால் இதன் இயற்கை மெச்சப்பட்டது. இதுவரை 10 தங்கமெடல் பரிசுக்குக் கம்பனியாரைத் தகுதியுடையவராக்கிப்புகழ்பெற்றது. மிகஇலேசானது, மலிவானது; ஒவ்வொரு ஓட்டிலும்குடை அடையாளம் விளங்கும். காங்கேசன் துறையிலே நவம்ரகக் கட்டப்படும் அரசினரின் சுகஸ்தான கட்டடங்களுக்கென

## தேவை.

தராதலப்பத்திரம் பெற்ற தமிழ் உபாத்தியாயனி.

மானேஜர்,
ஸ்ரீ சண்முக வித்தியாலயம்
தமிழ் பெண்பாடசாலை
திருக்கோணமலை.

(Mis. 543. 21, 28, & 4.)

## மலையாளம் சில்க்.

2½-வீதீ 5-நீளம் பட்டு 1-க்கு ரு.1-8-0
ஷை கம்பிக்கரை டசன் 1-க்கு ரு. 15
3-வீதீ 8-நீளம் வேஷ்டி 1-க்கு ரு 3-8-0

S. K. R, வீவிங் பாய்க்டரி,
(Y. 30.) கோட்டார், திருவிதாங்கூர்.

இக்குடை அடையாளமுள்ள 55,000 ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனத்திலே கண்ணாடி ஓடுகளுமுண்டு.

ஜே. செருபிம் அன்ட் பிறதர்,
ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.

(Y 29. 1 5 to 30-4-33)

## கவுண்மேந்துக்
### கொந்திறுத்துக்குக் கொடுபடும்

# கொளுக்கி ஓடுகள்.

மோர்கன், நட்சத்திரம், 14 இஞ்சுப்பக்கா ஓடு முதலியன அடைமழைக்கும் கசியாது; அண்டப்பார்த்தாப்போலக் கூரையில் அடுக்கலாம். பாரங்குறைவு, பெலனதிகம்; நல்ல அழுத்தமான இந்த ஓடுகள் 125 போட்டால், மற்ற ஓடுகள் 150 போடுகிற இடத்தை மூடும்.

பூ, சிங்கத்தலை, மயிலிறகு விசிறி, பூச்செடி, கலசமுடி, கோபுரமுடி முதலிய அழகான முகட்டோடுகளும், கண்ணாடி ஓடு, காற்றோடு, விசாலமான வெளிச்ச ஓடு, அலங்காரமான சிறுதூண் கல்லுகளும, தழிவிசைக் கல்லுகளும்.

யாழ்ப்பாண நகர், கிட்டங்கித்தெரு
**316-ம் நம்பர் ஓட்டுச்சாலையிற்**
பெற்றுக்கொள்ளலாம்.

Y 28 3'/5.

# ப ச ளை.

—*—

ஸல்பேற் ஒப் அமோனியா
(SULPHATE OF AMMONIA.)
எல்லாவிதமான பயிர்களுக்கும் வாய்ப்பானதென அநுபவத்திற் கண்டது.

விற்பவர்கள்:
கொழும்பு,
**கொம் மேர்சல் கம்பெனி**
(லிமிட்டெட்.)
கொம்பனித்தெரு.
கொழும்பு

(H 15 22-12-32. வி.)

வேண்டுஞ்சீதனப்பணத்திற்கோ, விரும்பும் இளைஞர்கல்விக்கோ, தூண்டு கைத்தொழில் விருத்திக்கோ, சொந்தக்குடும்பாதாரத்திற்கோ, ஆண்டுகடந்த அந்திக்காலை ஆறுதலாக வாழ்வதற்கோ:—

இப்பொழுதே

# புறுடென்ஷல்

வீமாக் கொம்பெனியில் சேரவும்.

இதுவே,
பிரித்தானிய சாம்ராஜ்யம் முழுவதிலும்
மிகப்பெரியதான வீமா ஸ்தாபனமாகும்.

பிரதானகாரியகர்த்தர்:-
DELMEGE FORSYTH & Co. Ltd,
Post Box 45. Colombo.

வடபாக மேற்பார்வைக்காரர்,
க. சொர்ணலிங்கம்,
மானிப்பாய்.

(Y. 11. 19 to 31-12-32) வி.

# சமாசாரத் திரட்டு.

## கால நிலை.

இன்று அதிகாலையிற் சிறிது மழை தூறியது; இன்னமும் மழைக்கோலங் காணப்படுகின்றது.

---

## கீழ்மாகாணச் சுப்பிறீங்கோடு.

கீழ்மாகாணச் சுப்பிறீங்கோடு இந்த ஆகஸ்ட்மாசம் 8உ மட்டக்களப்பிற் கூடும். கௌரவ மிஸ்ரர் W. E- பார்பர் அவர்களே நீதிபதியாய் விசாரணைகளை நடாத்துவார்.

---

## அரிசிமீது வரி.

### மாதர்களின் கண்டனம்.

இலங்கை மாதர் சங்கத்தின் நிர்வாகசபைக்கூட்டம்ஒன்று சென்ற 2-ந் தேதி கொழும்பிற் கூடியது. அத்தருணம் அரிசிமீது தீர்வையேற்றுவதற்கான தேசாதிபதியின் தீர்மானம் கண்டிக்கப் பட்டது

---

## அகில இலங்கை ஒத்துழைப்பு மகா நாடு

இலங்கையிலுள்ள ஒத்துழைப்புச் சங்கங்களின் மகாநாடு ஒன்று இந்த ஆகஸ்டு மாதம் 18உ கண்டியிற் கூடும். தேசாதிபதி அவர்களே தலைமைவகிப்பார். இலங்கையின் பல்வேறு பாகங்களிலுமிருந்து ஏறக்குறைய 600 பிரதிநிதிகள் வரையில் அங்குச் சமூகம்வகிப்பரென அறிகிறோம்

---

## வாலிப நீதிபதிகளுக்கு ஆதரவு.

சென்ற மாதம் 24உ நடந்த வட இலங்கைத் தொழிலாளர் சங்கத்தில் விவாக மாகாத வாலிபரை நீதிபதிகளாக அரசினர் அனுப்பவொண்ணாது என்ற ஓர் தீர்மானம்நிறைவேறியதைச் சென்றபிரசுரத்தில் வெளியிட்டுள்ளோம். அத்தீர்மானத்தைக் கண்டனஞ்செய்யும்பொருட்டு யாழ்ப்பாணம் நியாயவாதிகள்சங்கம இன்று பிற்பகல் 4½ மணியளவிற் கூடும்.

---

## 2 கொலைகளும் ஒரு தற்கொலையும்.

### சும்மாநின்ற நாய்க்குங் கொலை

கண்டியைச் சேர்ந்த மஹறாலா என்ற கிராமத்தில் வசிக்கும் ஒருவன் தனது மனைவியோடு சோரதேசம் பூண்டு வந்திருந்த பரோன் என்பவனையும் தனது மனைவியையும் வீட்டில் வளர்த்துவந்த ஓர் நாயையும் கொலைசெய்து தானும் தற்கொலை செய்துகொண்டதாகச் செய்தி எட்டுகிறது.

---

## இலங்கையில் இந்தியப் பட்டதாரிகள்.

சென்றவாரம் சிக்கன விசாரணைச் சபையினர் முன்னர்ச் சாட்சியம் கூறிய இலங்கை பிரிட்டிஷ் பட்டதாரிகள்சங்கத் தங்கத்தவர்கள் இலங்கை வித்தியாசாலைகளிற் கடமைபார்க்கும் இந்திய ஆசிரியர்களுக்கு இலங்கைப் பட்டதாரிகளிலும் பார்க்கக் குறைந்த விகிதத்திலேயே வேதனம் இனி அளிக்கப்படல்வேண்டுமெனக் கூறினார்கள்.

---

## பூலோசயாவதன்முன் சந்நதமா?

ஒருதூக்கு நிறைகொண்ட அரிசிக்கு ஒரு ரூபா மேலதிகமான இறக்குமதித் தீர்வை விதிக்க அரசினர் உத்தேசித்திருக்கின்றனர். இதற்கிடையில் கொழும்பிலுள்ள அரிசி வியாபாரிமார் பெருந்தொகையான அரிசிமூடைகள் அனுப்பும்படி இந்திய அரிசிவியாபாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறார்களாம். இவர்களுடைய நோக்கம் தீர்வை ஏறமுந்தியே அதிக அரிசியைத் தருவித்துக்கொண்டால், தீர்வை ஏறிய பின் அதிக இலாபத்திற்கு விற்கலாமென்பதேயாம். இதனை யறிந்த அரசினர் கொழும்பிலுள்ள கடைகளில் அரிசிவிலையை இப்பொழுதே கூட்டி விற்காதபடி வியாபாரிமாரைக் கட்டுப்பாடு செய்கின்றார்களாம். பணமுட்டான இக்காலத்திலே அரிசியும் விலையேறுமானால் நாடு என்ன பாடுபடுமோ அறியோம்.

---

## வதுளையிற் தற்கொலைகள்.

இப்போது சிலகாலமாகவதுளைப் பகுதியிற் தற்கொலைகள் அதிகரித்தே வருகின்றன என்று அறியலானோம் இற்றைக்குச் சின்னாட்களுக்குமுன் 28வயதுடைய சின்னச்சாமி என்னும் தோட்டக்கூலி யொருவன் தன்னுடைய விடுதியறைக்குள் சென்று தன்கழுத்தைக் கத்தியால் அரிந்து தற்கொலைசெய்தான்; இப்படியாகத் தற்கொலை செய்ததற்குக் காரணம் தெரியவில்லை.

விலஸாத் தோட்டத்தில் வேலைசெய்த 28 வயதுடைய குப்பாமுத்து என்ற ஓர் கூலிப் பெண் தனது மாமியோடு கொண்ட மனஸ்தாபத்தின்பயனாக ஓர் கச்சக்கிழங்கைத் தின்று உயிர்மாய்த்தாள்.

போகிரியா என்றகிராமத்தைச் சேர்ந்த அனுத்கெடாரா சமீந்தாசா என்பவன் தனது தாய் இறந்ததைச் சகிக்கொணாது, துப்பாக்கியினாற் சுட்டுத் தற்கொலை செய்தான்.

---

## வேலி பயிரை மேய்ந்தது.

### பொலிஸ் பரிசோதகர்க்குச் சிறை.

கேகாலையைச் சேர்ந்த மாவனல்லை என்ற கிராமத்து வாசியான கிரிஅப்புகாமி என்பவனை அடித்து அபாயகரமான காயம் விளைத்தாரென மேற்படி கிராமத்து உப பொலிஸ்பரிசோதகரான K. B. றம்புக்வெல்ல என்பவர் கேகாலைப் பொலிஸ்நீதிஸ்தலத்திற் குற்றஞ் சாட்டப்பட்டார். சென்றமாதம் 29-ந் திகதி மேற்படி வழக்கு கேகாலைப் பொலிஸ்நீதிபதி ஸ்ரீ க. சோமசுந்தரம் அவர்களால் விளங்கப்பட்டது. விசாரணையின்பின்னர் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு நீதிக்தலம் கலையும்வரையும் சிறைவாசத் தண்டனையும், 100 ரூபா அபராதமும் விதித்தனர். அபராதம் கொடுக்கப்பட்டால் அதில் 25 ரூபா வழக்காளிக்கு அளிக்கப்படல்வேண்டும் என நீதிபதி கட்டளையிட்டார்.

---

## ஹொறணவிற் கொலை.

சென்றவாரம் ஹொறணயிலுள்ள லேயினு என்ற 16 வயதுப் பெண் கோரமாகக் கொலை செய்யப்பட்டாள் என்ற செய்தி எட்டுகிறது. இறந்த லேயினு என்பவள் சார்ல்ஸ் அப்புகாமி என்பவனின் காமக்கிழத்தி யென்றும், அவள் இப்போது சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்த போது அவன் அவளைக் கவலையெடுத்துப் பராமரிக்கவில்லையென்றும், சென்ற 27-ந் திகதி அவள் அவனிடஞ் சென்று ஏதோ பணங் கேட்டாளென்றும், தன்னைப் பராமரிக்காதபடியால் அவளுக்குப் பணம் கொடுக்க அப்புகாமி மறுத்தானென்றும், அதனையிட்டு அவளுக்கும் அவனுக்குமிடையில் வாக்குவாதம் நிகழ்ந்ததென்றும், அவன் கோபமேலீட்டினால் தன் காமக்கிழத்தியாகிய அவளைக் கத்தியாற் குற்றிக் கொன்றுவிட்டுப் பொலிஸ்தானத்திற் சென்று தன்னை ஒப்புக்கொடுத்தானென்றும் மரண விசாரணையிற் கூறப்பட்டது.

---

## சுயராச்சிய பவனத்தைக்கைப்பற்ற முயற்சி.

### 25 பேர் சிறையாயினர்.

பொலிசார் வசம் இருக்கும் சுயராச்சிய பவனத்தைக் கைப்பற்றும்நோக்கமாக 50 தொண்டர்கள் சாத்வீகப் போரியற்றினர். அவர்களுள் 25 பேர் சிறைப்பட்டனர்.

---

## சென்னைச்சிறையில் உண்ணாவிரதம்.

ஸ்ரீ சுபாஸ் சந்திரபோஸ், ஸ்ரீ வூங்கர், ஜெப கிருஷ்ண என்பனவோருட்படப் பல அரசியற் சிறையாளர் சென்ற ஒருவார காலமாகச் சென்னைச் சிறைக்கூடத்தில் உண்ணாவிரதமிருந்து வருகின்றனர்

---

## தேசாபிமானப் பாலகர்க்குக் கசையடி.

அந்நிய நாட்டுத்துணிக்கடைகளுக்கு முன்னர் நின்று மறியல் செய்தார்கள் என 3 சிறுவர்கள் அலகாபாத் நீதிபதி முன்னால் குற்றம் சாட்டப்பட்டனர் அந்தக் காருண்ணிய நீதிபதி அவர்களுக்குத் தலைக்கு 12 கசையடி விதித்தார்.

---

## தேசியப் பத்திரிகைக்கு 10000 ரூபா ஜாமீன்.

"பிரீபிரஸ் ஜேர்ணல்" "பிரீபிரஸ் புலற்றின் பிரஸ்" என்னும் இருதேசியப் பத்திரிகைகளின் பிரசுரகர்த்தாவாகிய ஸ்ரீ சதானந்தா மேற்படி பத்திரிகைகள் இராசத்துரோகமான கட்டுரைகளை வெளியிட்டிருந்ததால்10(0) ரூபா ஜாமீன் கட்டவேண்டுமென பம்பாய் நீதிபதியால் விதிக்கப்பட்டார்

---

## இந்திய-ஐரிஷ் மகா நாடு.

இற்றைக்கு இன்னாட்களுக்குமுன் ஐயர்லாந்தில் நிறுவப்பட்ட இந்திய—ஐரிஷ் சுயேச்சைச் சங்கத்தின் ஆதரவின் கீழ் இந்த ஆகஸ்ட் மாதக் கடைசிப்பகுதியில் ஓர் இந்தியப் ஐரிஷ் தேசிய மகாநாடு கூடும் அம்மகாநாட்டிற்கு ஸ்ரீ வித்தல்பாய்படேலும் சில இந்தியப் பிரமுகர்களும் இந்தியப் பிரதிநிதிகளாகச் செல்வார்கள்; பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அதிகாரத்தினின்று இந்தியா ஐயர்லாந்து என்னும் இரு நாடுகளும் எவ்வாறு மீட்சிபெறுவது என்பதைப்பற்றியே மேற்படி மகாநாட்டில் ஆலோசிக்கப்படும்.

---

## கலிகால நல்லதங்காள்.

பாடலிபுரத்தைச் சேர்ந்த ஓர் கிராமத்தில் வசிக்கும் ஓர் பெண் தன் கைக்குழந்தையை இடுக்கிக்கொண்டு ஓர் கிணற்றில் வீழ்ந்து உயிர்துறந்தனள் என்று கற்கத்தா "அமிர்தபசார்" பத்திரிகை கூறுகின்றது. மேற்படிபெண்ணானவள் தன் இனத்தவர் சிலரோடு கொண்ட மனஸ்தாபம் காரணமாகவே இப்படித் தற்கொலை செய்தாளென்று தெரியவருகின்றது. சம்பவம் நடந்த சிலமணித்தியாலங்களுக்குப் பின்னரே அவளினதும் பிள்ளையினதும் பிரேதங்கள் வெளியே எடுக்கப்பட்டன.

---

# தேசபக்தரின் தேகநிலைமை.

## டக்ரர் மகமது ஆலம்.

### அபாயகரமான நிலைமை.

பிரபல முஸ்லிம் தலைவரான டக்ரர் மகமது ஆலம் அவர்கள் தற்போது லாகூர்ச் சிறைக்கூடத்தில் மிக்க அசௌக்கியமான நிலைமையில் இருக்கின்றார் என லாகூர் "ரிறிபியூன்" பத்திரிகை கூறுகிறது.

---

## ஸ்ரீ. அபயங்கார்.

பிரபலநியாயவாதியாகும் ஸ்ரீ அபயங்கார் தற்போது நாகபுரிச் சிறைக்கூடத்திலிருந்து சுகவீனமாய் இருக்கிறார் எனத் தெரியவருகிறது அவருடைய தேக நிலைமையைப் பரிசோதிப்பதற்கு அநுமதிதரல்வேண்டுமென டக்ரர் காறி என்பவர் அரசினருக்கு மனுப்பண்ணியிருந்தனர். இதுவரையில் ஒருவிதமான மறுமொழியும் மேற்படி டக்ரருக்கு அரசினரிடமிருந்து கிடைக்கவில்லையாம். பொதுஜனங்கள் மிக்கபீதியடைந்திருக்கிறார்கள்

---

## பண்டித ஜவகர்லால்.

சென்றமாதம் 26உ டக்ரர் அன்சாரி அவர்கள் பண்டிதர் ஜவகர்லால் நேரு அவர்களை டேராடன சிறைக்கூடத்திற் கண்டு பேசினார். பண்டிதர் அவர்களின் தேகநிலைமையைப்பற்றி டக்டர் அன்சாரி பின்வருமாறு கூறினார்:

பண்டிதர் நெடுங்காலமாகச் சுவாச நோயினால் வருந்தி வருகிறார் அவரின் தேக நிலைமை பக்சமுறம் நோத்தில் சுவாச நோய் மிக்க பயங்கரமான நிலைமையை அடைகின்றது எனினும் பரெய்லிச் சிறைக் கூடத்தில் இருந்து டேராடன் சிறைக்கூடத்திற்கு வந்தபின் அவரின் நிலைமை சற்றுதிருப்திகரமாகவிருக்கிறது. அவருடைய தேகோஷ்ண ஸ்திதி சாதாரண மனிதர்க்குள்ளஸ்திதியை இப்போது அடைந்திருக்கிறது. இப்போது சிலகாலமாகவிருந்ததிலும் பார்க்கப் பண்டிதர் நிறையிலுங் கூடியிருக்கிறார்; தற்போது அவர் பல்நோயால் வருந்துகிறார் இன்னும் சிறிது காலத்திற்கு டேராடெனனில் வசிப்பாராயாகில் ஜவகர்லாலுக்கு நன்மையேற்படக்கூடும்

---

## யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்க பரீக்ஷைகள், 1932.

இச்சங்கத்து இவ்வாண்டுப் பரீக்ஷைகளிற் சித்தியெய்தாது தவறிய பரீக்ஷார்த்திகள் இன்ன இன்ன பாடத்தில் தவறினர் என்பது அவர்களது சுட்டெண்களுக்கெதிரே அவ்வப்பாடங்களுக்கு 0 இட்டு அடியில் காட்டியிருக்கிறது..........

| பரீக்ஷார்த்திகளின் சுட்டு எண். | இலக்கியம். | இலக்கணம். | வியாசம் | 4ம் பாட வகை. | பூரண அமிசமொத்தம். |
|---|---|---|---|---|---|
| பண்டிதர். | | | | | |
| 1 | — | — | — | — | 0 |
| 2 | — | — | 0 | — | 0 |
| 4 | 0 | 0 | 0 | — | 0 |
| பாலபண்டிதர். | | | | | |
| 15 | — | — | — | 0 | 0 |
| 16 | 0 | 0 | — | 0 | 0 |
| 21 | — | — | 0 | 0 | 0 |
| 22 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 25 | 0 | 0 | — | 0 | 0 |
| 27 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 28 | 0 | 0 | — | 0 | 0 |
| 33 | 0 | 0 | — | — | 0 |
| 34 | 0 | 0 | — | 0 | 0 |
| 36 | — | 0 | — | 0 | 0 |
| 40 | — | — | 0 | — | 0 |
| 42 | — | — | — | 0 | 0 |
| 44 | 0 | 0 | — | 0 | 0 |
| 48 | — | 0 | — | 0 | 0 |
| பிரவேச பரீக்ஷை. | | | | | |
| 50 | — | — | — | — | 0 |
| 52 | 0 | — | — | — | 0 |
| 56 | 0 | 0 | — | — | 0 |
| 57 | 0 | 0 | — | 0 | 0 |
| 58 | 0 | — | — | — | 0 |
| 59 | 0 | — | — | — | 0 |
| 63 | 0 | — | — | — | 0 |
| 64 | 0 | 0 | — | — | 0 |
| 65 | 0 | 0 | — | 0 | 0 |
| 66 | 0 | 0 | — | 0 | 0 |
| 67 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 68 | 0 | — | 0 | — | 0 |
| 69 | 0 | 0 | — | — | 0 |
| 70 | 0 | 0 | — | 0 | 0 |
| 71 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 72 | 0 | 0 | — | — | 0 |
| 74 | — | — | — | 0 | 0 |
| 75 | — | 0 | — | — | 0 |
| 76 | — | 0 | — | — | 0 |
| 77 | 0 | 0 | — | — | 0 |
| 81 | 0 | — | — | — | 0 |
| 82 | 0 | 0 | — | — | 0 |
| 83 | 0 | — | — | — | 0 |
| 84 | 0 | — | — | — | 0 |
| 85 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 86 | 0 | — | — | — | 0 |
| 87 | 0 | — | — | 0 | 0 |
| 93 | 0 | — | — | — | 0 |
| 97 | 0 | — | — | — | 0 |
| 99 | 0 | 0 | — | — | 0 |
| 101 | 0 | — | — | — | 0 |
| 103 | 0 | 0 | — | — | 0 |
| 105 | 0 | 0 | — | — | 0 |
| 107 | 0 | — | — | — | 0 |
| 108 | 0 | 0 | — | — | 0 |

தி. சதாசிவஐயர்,
காரியதரிசி
யா. ஆ. தி. பா. சங்கம்.

---

## அகில இலங்கை அரசியல் விவகார மகாநாடு.

3-ம் பக்கத்தொடர்ச்சி.

உண்மையான பிரதிநிதிகளினாலேயே பரிபாலிக்கப்படவேண்டுமென்பது எனது உள்ளக்கிடக்கை. அரசாங்கசபை எவ்வளவு கூடாததாயிருந்தாலும் அங்கத்தவர்கள் சனங்களின் பிரதிநிதிகளென்றே கொள்ளப்படுகிறார்கள். ஆனதால் சனப்பிரதிநிதிகளே சனங்களுக்கு நன்மையானவை எவையென்பதை உள்ளபடி உணர வல்லுநராவார். தேசாதிபதியோ சனப்பிரதிநிதியோ நாட்டைப் பரிபாலிப்பது என்ற கேள்வி பிறக்கின்றது. பரிபாலனச் செலவைச் சரிபண்ணுவதற்கு அரிசி இறக்குமதித்தீர்வையைக் கூட்டினாலென்ன? ஒரே தொகையாகக் கொடுக்கும் "கம்யூற்றற் பென்ஷனை" கொடாமல் மாசவீதம் பகிர்ந்து கொடுத்தாலென்ன அதைப்பற்றி எங்களுக்குக் காரியமில்லை. ஏதொன்றும் சனப்பிரதிநிதிகளினால் நிச்சயிக்கப்படல்வேண்டும் என்பதே எங்கள் கொள்கை.

அடுத்த வருடப் பரிபாலனச் செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் விஷயத்தில் மந்திரிமாரும் சபை அங்கத்தவர்களும் தேசாதிபதி சொல்வதை யெல்லாந் தாங்கள் எப்பொழுதுஞ் செய்யப் போவதில்லை யென்பதைத் தேசாதிபதிக்குக் காட்டி வைக்கவேண்டும் என்று நான் சொல்லுகிறேன். தேசாதிபதி சனங்களின் நன்மைக்கு விரோதமாகக் கருமஞ் செய்யப் புகின் இந்த இருபகுதியாரும் தங்களுக்கும் தேசாதிபதிக்கும் எவ்வகையான தொடர்புமில்லையென்று சொல்லி விலகிவிடவேண்டும். இந்த நியாயத்தை அடிப்படையாகக் கொண்டே, தேசாதிபதியை விட்டுவிட்டு சனப்பிரதிநிதிகளாக வுள்ளவர்கள்ஊரவர்களிடம்மீண்டுவந்து ஊரவர்களின் அபிப்பிராயத்தை உசாவியறிந்து ஊரவர்கள் சொல்லுகிறபடி நடக்கவேண்டுமென்று நான் சொல்லுகிறேன்.

இந்த அரசாங்கசபையைத் திருத்துவதற்கு இதுவே வாய்த்த தருணம்; இப்படியான தருணம் வாய்க்குமென நாம் எப்போதாயினும் காத்திருந்ததில்லை. ஆதலினால் எங்களுக்கிடையேயுள்ள அபிப்பிராயபேதங்களையும் பிணக்குகளையும் ஒழித்து ஐக்கியப்பட்டு இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் ஒத்துழைக்கவேண்டும். இப்படிச் செய்வோமானால் நாங்கள் நினைத்தகாரியம் இனிது கைகூடும்."

---


*THE JAFFNA BENEFIT COMPANY.*

வட இலங்கை ஏலச்சீட்டுக் கம்பெனி.

(றெஜிஸ்தர் செய்யப்பெற்றது)
*No.* 211. இரண்டாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்.

1. மாசம் 40 ரூபா விகிதம் கட்டவேண்டிய (*A*) வகுப்பு 1000 ரூபாச் சீட்டின் (முதலாம் வலம்) முதலாஞ்சீட்டு 1932-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்குக் கூறிவிடப்படும்.

2. மாதம் 20 ரூபா விகிதம் கட்டவேண்டிய (*B*) வகுப்பு 500 ரூபாச் சீட்டின் (இரண்டாம் விற்பனை) முதலாம் சீட்டும் அதே வகுப்பின் இரண்டாம் தொகுதிச் சீட்டும் 1932-ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 20-ந்தேதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்குக் கூறிவிடப்படும்.

3. மாதம் 10 ரூபா விகிதம் கட்டவேண்டிய (*C*) வகுப்பு 200 ரூபாச் சீட்டின் (2-ம் விற்பனை) முதலாம் சீட்டும் அதேவகுப்பின் 2-ம் தொகுதியும் 1932-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ந் தேதி புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்குக் கூறிவிடப்படும்.

4 மாதம் 5 ரூபா விகிதம் கட்டவேண்டிய (*D*) வகுப்பு 125 ரூபாச் சீட்டின் 2-வது சீட்டு 1932-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ந் தேதி புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்குக் கூறிவிடப்படும்.

5 மாதம் 100 ரூபா விகிதம் கட்டவேண்டிய எங்கள் "விசேஷ" வகுப்பு 2500 ரூபாச் சீட்டின் முதலாம் சீட்டு (முதல்விற்பனை) 1932-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3-ம் தேதி 4 மணிக்குக் கூறிவிடப்படும்.

இதிற் சேரவிரும்புவோர் காலதாமதம் செய்யாது சேரவும். தாங்கள் விரும்பும் சீட்டு விற்பனை நடக்குமுதல் வெள்ளிக்கிழமை 4 மணிக்கு முன் சேரவேண்டியது.

எங்கள் சீட்டுக்கள் மாதந்தோறும் நல்ல இலாபப்பங்கு கொடுப்பன மாத்திரமன்றி அங்கத்தவர்களுக்குப் பணமுட்டு நெருக்காலங்களில் பணவுதவிசெய்யவுங் காயுமிருக்கின்றன. வேறெங்கு பணத்தைச் சேமித்தாலும் இந்த நயந் நன்மைகளைப் பெறமாட்டீர்கள்.

விதானக்கட்டும், மனுப்பத்திரக்கட்டும் கீழ் காணப்படும் விலாசத்திற்கெழுதுக.

S. R. இக்னேஷஸ்,
மானேஜர்.
28-7-32.

ஸ்ரீ

கதிர்காமம்

கதிரைமலைத்



தண்ணீர்ப்பந்

தர்த் திருப்

பணித் தர்மம்.



கதிரைமலை கடுமலையிலுள்ள முத்துமாணிக்க விநாயகப் பெருமான் உத்தரவு பெற்று வருஷா வருஷம் பக்தகோடி அடியார்கள் பொருளுதவியால் நடந்தேறிவருகிற கெடி தண்ணீர்ப்பந்தல் மேன் மேலும் நடந்தோங்கி வருகிறது.

குறித்த கதிரமலை உச்சியிலும் கடுமலையிலும் திருமடம் அமைத்து அடிவாரத்திற் பெருமானுற் காட்டப்பட்ட தீர்த்தக்கிணற்றிலிருந்து கடுமலை விநாயகர் கோவில்வரை குழாயிணைத்து தண்ணீர்த் தருமம் நடத்துவதற்குப் பெரும் பொருள் வேண்டும்.

இத்தருமம் நிறைவேறும் பொருட்டு கனதனவான்களாகிய சகல புண்ணியசீலர்களும் தங்கள் தங்களால் இயன்றளவு பொருளுதவி செய்யும்படி வேண்டிக் கொள்ளுகின்றேன்.

உதவும் பணத்தை அனுப்பும் விபரம்:—

யாழ்ப்பாணம் தீவுபற்று மணியம், வேலணை ஸ்ரீ மு. சோமசுந்தரம்பிள்ளை அவர்களிடம் அனுப்பவும்.

முத்துமாணிக்க வேல்சாமி சீடனுகிய சி. வீரவாகுப்பிள்ளை குமாரன்
வீ. ஆ. துரைசாமிப் பரதேசியார்,
கதிரைமலை

(Y. 16. 9-7—8-7-32.) (வி)

# விளம்பரம்.

—:o:—

ஜவுளிவகையில்

## எல்லாவிதமான துணிகளும்

பெரியகடை, காங்கேயன்துறைத்

தெருவிலுள்ள எமது

## சில்லறைவிற்பனைக் கடையில்

தாங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லா ஜவுளிகளும்,

## இலங்கையிற் செய்யப்பட்டன

என்பதற்கு உத்தரவாதம்.

மற்றைய விடங்களிலும் பார்க்க எமது ஜவுளிகள்

## குணத்தாற் சிறந்தன

## விலையாற் குறைந்தன.

இன்னும், ஒருமுறை வந்து பார்ப்பின்

இதனுண்மை நன்குபுலப்படும்.

## இலங்கை நெசவுத்தொழிற்சாலை

லிமிட்டெட்.

(Y. 20.)

இலங்கை ஆயுர்வேத

# ரசாயன அவுஷத தொழிற்சாலை லிமிட்டெட் யாழ்ப்பாணம், இலங்கை.

(இலங்கைச் சட்டப்படி றெஜிஸ்டர் பதிவுசெய்யப்பட்டது.)

## விளம்பரம்.

மூலதனம்:—ஒரு லக்ஷ ரூபா (100,000)

பத்து (10) ரூபா விலையுள்ள
பதினுயிரம் (10,000) பங்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

ஒரு பங்கிற்கதிகம் எடுப்பவர்கள் மனுப்பத்திரத்துடன் ஒவ்வொரு பங்கின்பேரிலும் 2 ரூபா 50 சதமும், பின் பங்கு அங்கீகரிக்கப்பட்டவுடன் பங்கின்பேரில் 2 ரூபா 50 சதமும், பின் மாதவீதம் 2 ரூபா 50 சதமும் கட்டிவரவேண்டும்.

ஒரு பங்குமட்டும் எடுப்பவர்கள் முழுத்தொகையையும் மனுவுடன் அனுப்பவேண்டும்.

## பங்குகள் இப்பொழுது விற்கப்படுகின்றன.

காலதாமதமின்றி உடன்மனுச்செய்து
உங்கட்குத் தேவையான பங்குகளை
வாங்கிக்கொள்ளுங்கள்

இன்னும் ஒருமாசத்திற்குள் பங்குகள் எல்லாம் விற்றுப்விடும்.

(Y. 25. 4-3—7-2-33, [வி]

## சாலாமிஸ்திரி லேகியம்.

—:o:—

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனுல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித, கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சசர்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, கீர்முளரி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த, செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்ஷவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரிகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைருத்தலுக்கு ரூபா க0. கால்ருத்தலுக்கு ரூபா ரு. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினுல் முன் மணிஆடர்அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு.

(Y 27. 31-12-32.) ஒலோன்.

## உயர்தரமான தமிழ் நூல்கள்!

(1) தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு மெய்கண்ட விருத்தியுரையுடன் ரூ. 4. (2) பட்டினத்துப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பிரபந்தத்திரட்டின் விருத்தியுரை ரூ. 3½. (3) திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், தெளிபொருள் விளக்கப் பதவுரையும், விசேஷக்குறிப்புகளுடன் ரூ. 4. (4) விநோதரசமஞ்சரி ரூ. 2. (5) அராபிக் கதை ரூ. 2½. (6) பழமொழியகராதி ரூ. 3. (7) ஆத்திசூடிப்புராணம் ரூ. 2. (8) கல்லாடம் மூலமும் உரையும் ரூ. 3. (9) நாலடியார் ரூ. 2. (10) நைடதம் மூலமும் விருத்தியுரையும் ரூ. 4. (11) ராமகிருஷ்ணபரமஹம்ஸர் விரிவான சரித்திரம் ரூ. 3.

தமிழ்புத்தகயாட்லாருக்கு → இனும் ←
ஒற்றுமை ஆபீஸ்.
2. சைதாப்பேட்டை, மதருஸ்.

ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்.

(Y. 17. 7-9 8-9-5

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna.